பக்கங்கள்: பன்னிரண்டு

Registered as a Newsp

# உதயன்

விலை
ரூபா
7.00

சுடர்:17 வள்ளுவர் ஆண்டு 2033 தை 22 திங்கட்கிழமை (04-02-2002) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:71

# இன்றைய சுதந்திரதின விழாவில் சந்திரிகா, ரணில் ஒரே மேடையில்!

## 10 ஆண்டுகளுக்குப் பிறகு முப்படை அணிவகுப்பு

கொழும்பு,பெப்.4

இலங்கையின் 54ஆவது சுதந்திர தினம் இன்று கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் வெகு கோலாகலமாகக கொண்டாடப்படுகின்றது. ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிப் பொறுப்பை ஏற்றபின் முதலாவதாகக் கொண்டாடப் படும் ஒரு தேசிய முக்கியத்துவம் வாய்ந்த விழாவாக 54ஆவது சுதந்திரதின விழா நடைபெறுகின்றது. ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவும் இணைந்து சுதந்திர தினக்கொண்டாட்டங்களில் கலந்து கொள்கின்றனர்.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி எதிர்க்கட்சியைச் சேர்ந்தவராகவும் நாடாளுமன்ற அதிகாரத்தைக்கொண்ட பிரதமர் ஆளும் கட்சியின் தலைவராகவும் ஒரே மேடையில் அமர்ந்து சுதந்திரதின வைபவங்களில் கலந்துகொள்கிறார்கள். இலங்கை வரலாற்றில் இது ஒரு சரித்திர முக்

(12ஆம் பக்கம் பார்க்க)

# கறுப்புப் பட்டிகளை அணிந்து மீனவர்கள் இன்றும் மறியல்!

## செயலகத்தில் கொடி ஏறாது!

யாழ்ப்பாணம்,பெப்.4

யாழ்.கடற்றொழிலாளர் சமூகம் மேற்கொண்டுவரும் மறியற்போராட்டம் சுதந்திரதினமான இன்றும் தொடர்ந்து நடைபெறவுள்ளது.

யாழ்.செயலகத்துக்கும் பிரதேச செயலகத்துக்கும் முன்பாக இன்று மறியற்போரில் ஈடுபடும் மீனவர்கள் கறுப்புப் பட்டிகளை அணிந்திருப்பர் என்று மீனவர் பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார்.

இன்றும் மீனவர்கள் மறியல் செய்வதால் யாழ்.செயலகத்தில் சுதந்திர தின கொடியேற்றல் நிகழ்வு நடைபெறமாட்டாது எனத் தெரியவருகிறது.

செயலகத்தில் தேசியக்கொடி ஏற்ற அதிகாரிகள் முற்பட்டால் அதனைத் தடுக்கப்போவதாக மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

(12ஆம் பக்கம் பார்க்க)

# கட்டாய ஆள்சேர்ப்பில் புலிகள் ஈடுபடவில்லை!

# மறுக்கின்றார் கரிகாலன்

மட்டக்களப்பு,பெப்ரவரி4

**கிழக்கில் விடுதலைப் புலிகள் கட்டாய ஆள்சேர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுவதாக வெளியாகி இருக்கும் செய்திகளைப் புலிகளின் மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் கரிகாலன் அடியோடு நிராகரித்திருக்கிறார்.**

**புலிகள் இயக்கத்துக்கு மாசு கற்பிக்கும் நோக்குடன் - சமாதான முயற்சிகளைச் சீர்குலைக்க விரும்பும் சக்திகள் - இத்தகைய பொய்ப்பிரசாரங்களை முடுக்கிவிட்டுள்ளன என்று அவர் குற்றஞ்சாட்டினார்.**

கொக்கட்டிச்சோலையில் உள்ள புலிகளின் அலுவலகத்தில் அரசியல் துறைப் பொறுப்பாளர் கரிகாலன் நேற்று செய்தியாளர் மாநாடு ஒன்றை நடத்தினார்.

அங்கு அவர் தெரிவித்ததாவது:-

வடபகுதிக்கு அத்தியாவசியப் பொருள்கள் அனுப்பப்படுகின்றன. ஆனால் மட்டக்களப்பில் உள்ள இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிகளுக்கு மக்கள் அத்தியாவசியப் பொருள்களை எடுத்துவரமுடியாமல் இருக்கிறது. இங்குள்ள படையினர் அரசாங்கத்தின் உத்தரவை மதித்து நடக்க

(12ஆம் பக்கம் பார்க்க)

# கப்பல் பயணிகள் ஏமாற்றம்!

யாழ்ப்பாணம்,பெப்.4

'சிற்றி ஒவ் றிங்கோ' பயணிகள் கப்பல் சேவை நேற்றும் நடைபெறவில்லை.

இக்கப்பல் நேற்று காங்கேசன் துறையில் இருந்து பயணிகளை ஏற்றிச் செல்லும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. இந்தக் கப்பலில் பயணம் செய்வதற்காக 400 பயணிகள் நேற்று காங்கேசன்துறைக்கு அழைத்துச் செல்லப்பட்டிருந்தனர். அங்கு பயணிகள் கப்பலில் ஏற இருந்த சமயம் கடற்கொந்தளிப்பு காரணமாக

(12ஆம் பக்கம் பார்க்க)

# எரிந்து கருகிய நிலையில் இரு பெண்களின் சடலங்கள்

## தும்பளைப் பகுதியில் பரபரப்பு

நெல்லியடி,பெப்.4

தீ மூட்டி எரிந்து கருகிய நிலையில் இரு சடலங்களின் எச்சங்கள் தும்பளைப் பகுதியில் நேற்று கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன.

வீடு ஒன்றில் தனிமையில் வசித்து வந்ததாகக் கூறப்படும் இரு பெண்களின் சடலங்களோ அவை என்று சந்தேகிக்கப்படுகிறது.

தும்பளை வடலிப்பாதி என்னும் இடத்தைச் சேர்ந்த ஓய்வுபெற்ற ஆசிரியை நல்லதம்பி அழகம்மா (வயது 80) அவரது பெறாமகளான சாந்தினி தேவி வேலாயுதபிள்ளை (வயது 40) ஆகிய இருவருமே சடலங்களாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளனர்.

தனித்து வசித்து வந்த இவர்கள் கடந்த சில தினங்களாக வெளியில் நடமாடாததை அடுத்து சந்தேகம் கொண்ட அயலவர்கள் வீட்டில் தேடிப் பார்த்த சமயம் அங்கு துர்நாற்றம் வீசி

(12ஆம் பக்கம் பார்க்க)

## தெவிநுவர கடலில் சனி இரவு சம்பவம்:

# இத்தாலிக்கு ஆள்களை ஏற்றிச்சென்ற படகு கடற்பாறையில் மோதி விபத்து!

## 50க்கு மேற்பட்டோர் பலி என அச்சம்!!

கொழும்பு,பெப்.4

இத்தாலிக்குச் செல்வதாகக் கூறி நீர்கொழும்புப் பகுதியில் இருந்து சட்டவிரோத குடியேறிகளை ஏற்றிச் சென்ற படகு ஒன்று மாத்தறை தெவிநுவரவில் இருந்து சுமார் 5 கிலோ மீற்றர் தொலைவில் - கடலில் பாறையுடன் மோதுண்டு - விபத்துக்குள்ளாகியிருக்கிறது.

ஐம்பதுக்கு மேற்பட்டோர் படகில் ஏற்றப்பட்டிருந்தனர். அவர்களில் நால்வர் நீரில் மூழ்கி உயிரிழந்திருக்கின்றனர். ஏழுபேர்வரை கரைக்கு மீட்டு வரப்பட்டிருக்கின்றனர். மேலும் பலர் கடலில் மூழ்கி இருக்கலாம் என்று அஞ்சப்படுகிறது.

நேற்றுமுன்தினம் இரவு விபத்து இடம்பெற்றுள்ளது. மீனவர்கள் மூலம் தகவல் கிடைத்தவுடன் மாத்தறை பொலீஸ் நிலைய அவசர சேவைப் பிரிவினர் உடனடியாக அங்கு விரைந்து கடற்படையின் உதவியுடன் மீட்புப் பணிகளை ஆரம்பித்தனர்.

கடற்படையினருடன் இணைந்து சுழியோடிகள் சடலங்களைத் தேடி வருகின்றனர். கடற்கொந்தளிப்பு காரணமாக மீட்புப் பணி பாதிக்கப்பட்டிருக்கிறது.

சுமார் 170 சட்டவிரோத குடியேறிகள் படகில் ஏற்றிச்செல்லப்பட்டதாகவும் அவர்களில் சுமார் 50 பேர் வரை நீரில் மூழ்கி இறந்துவிட்டதாகவும் ஒரு செய்தி தெரிவித்தது.

படகில் 84 பேர் பயணம் செய்

(12ஆம் பக்கம் பார்க்க)

# உண்ணாவிரதப் போராட்டத்தை யாழ்.கைதிகள் இடைநிறுத்தினர்

யாழ்ப்பாணம்,பெப்.4

யாழ்.சிறைச்சாலையில் உண்ணாவிரதத்தில் ஈடுபட்டிருந்த கைதிகள், யாழ்.நீதிவான் அளித்த வாக்குறுதியையடுத்து தமது போராட்டத்தை 10 நாள்கள் ஒத்திவைத்துள்ளனர்.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு யாழ்.சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளில் 17 பேர், கடந்த வெள்ளிக்கிழமை முதல் "தம் மீதான விசாரணையை உடன் தொடங்க வேண்டும் அல்லது விடுதலை செய்ய வேண்டும்" என்று கோரி உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டு வந்

(12ஆம் பக்கம் பார்க்க)

## உள்ளூராட்சித் தேர்தலுக்கு

# வேட்பு மனுத் தாக்கல் செய்ய தமிழர் கூட்டமைப்பு முடிவு!

கொழும்பு,பெப்.4

எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலில் வடக்கு - கிழக்கில் உள்ள சபைகளுக்குப் போட்டியிட வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்வது என்று தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்பு நேற்று முடிவு செய்தது.

கூட்டமைப்பின் கூட்டம் ஒன்று நேற்றுமாலை கொழும்பில் இடம்பெற்ற சமயம் இதுவிடயமாக விரிவாக ஆராய்ந்து இந்த முடிவு எடுக்கப்பட்டதாக கூட்டமைப்பின் பிரமுகர் ஒருவர் தெரிவித்தார்.

வடக்கு - கிழக்கில் உள்ளூராட்சிச் சபைகளுக்கான தேர்தலை ஒத்திவைக்கும் அறிவிப்பை ஜனாதிபதியே விடுக்க வேண்டும் என்றும் -

ஆனால் ஜனாதிபதி அந்த அறிவிப்பை வெளியிடுவது சந்தேகம்

(12ஆம் பக்கம் பார்க்க)

# நோர்வேக் குழு இன்று வருகிறது

கொழும்பு,பெப்.4

நிரந்தரப்போர் நிறுத்தத்தை உள்ளடக்கிய புரிந்துணர்வு உடன்படிக்கையைத் தயாரிப்பது தொடர்பான இறுதிக்கட்டப் பேச்சுக்களை அரசுத் தரப்புடன் மேற்கொள்ள நோர்வேத் தூதுக்குழு இன்று கொழும்பு வருகின்றது.

இக்குழு பிரதமர், ஜனாதிபதி உட்படப் பலரையும் சந்தித்து நிரந்தர யுத்தநிறுத்தத்தை உள்ளடக்கிய புரிந்துணர்வு ஒப்பந்தம் குறித்துக் கலந்துரையாடும்.

நிரந்தர யுத்தநிறுத்தம் தொடர்பான உடன்படிக்கையில் அரசும் விடுதலைப் புலிகளும் இம் மாதம் மூன்றாவது வாரத்தில் கைச்சாத்திடக்

(12ஆம் பக்கம் பார்க்க)

# 'சுடர் ஒளி' பத்திரிகை விநியோகித்த 'ஹை - ஏஸ்' வான் கடத்தப்பட்டது!




கொழும்பு,பெப்.4

'சுடர் ஒளி' பத்திரிகை விநியோகத்தில் ஈடுபட்டிருந்த 'ஹை - ஏஸ்' வான் மற்றொரு வாகனத்தில் முகமூடி அணிந்து வந்த இனந்தெரியாத குழு ஒன்றினால் கடத்தப்பட்டது.

இந்தச்சம்பவம் நேற்றுமுன்தினம் (சனிக்கிழமை) அதிகாலை 12.45 மணியளவில் ஹோமகம பகுதியில் இடம்பெற்றுள்ளது.

விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரன் 'சுடர் ஒளி' பத்திரிகையை வாசிக்கும் காட்சியை முகப்புப் படத்தில் தாங்கி வெளிவந்த 'சுடர் ஒளி' வாரவெளியீட்டையும் கடந்த சனிக்கிழமைக்குரிய தினசரி 'சுடர் ஒளி' வெளியீட்டையும் முகவர்களுக்கு விநியோகிக்கும் பணியில் ஈடுபட்டிருந்த சமயமே இந்த வான் கடத்தப்பட்டது.

கொழும்பு நகரப் பகுதிக்கான பத்திரிகை விநியோகத்தை முடித்துக் கொண்டு புறநகர்ப் பகுதிக்கான பத்திரிகைப் பார்சல்களுடன் சென்று கொண்டிருந்த சமயம் அப்பகுதியில் பத்திரிகைப் பார்சல்களை ஒப்படைப்பதற்காக வாகனம் தரித்து நின்றபோது அது கடத்தப்பட்டது.

(12ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# கடந்த வருடம் 28 ஆயிரம் கண்ணிகளை இராணுவத்தினர் செயலிழக்கச் செய்தனர்

## யாழ்.படைத் தலைமையகம் அறிக்கை

யாழ்ப்பாணம்,பெப்.4

குடாநாட்டில் பல்வேறு பகுதிகளிலும் கடந்த வருடம் 28 ஆயிரத்து 226 கண்ணிகளை இராணுவத்தின் வெடிகுண்டு செயலிழக்கச் செய்யும் பிரிவினர் கைப்பற்றிச் செயலிழக்கச் செய்துள்ளனர் என்று யாழ்.பாதுகாப்புத் தலைமையகம் தெரிவித்துள்ளது.

இதுவிடயமாக பாதுகாப்புத் தலைமையகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

குடாநாட்டு மக்களின் வாழ்க்கைத தரத்தை மேம்படுத்தும் வகையில் மக்களுக்கு அச்சுறுத்தலாகக் காணப்படும் மிதிவெடிகள், கண்ணிவெடிகளை அகற்றுவதில் 95 ஆம் ஆண்டு முதல் படையினர் ஈடுபட்டுள்ளனர்.

கடந்த வருடம் கொழும்புத்துறை, சாவகச்சேரி, முகமாலை மற்றும் யாழ். நகருக்கு அருகில் உள்ள பகுதிகளிலும் கண்ணி அகற்றும் பணி இடம் பெற்றது.

ஆள்களுக்கு எதிரான மிதிவெடிகள் - 25 ஆயிரத்து 906, இராணுவ கவச வாகனங்களைத் தகர்க்கப் பயன்படுத்தப்படும் வெடிகுண்டுகள் - 156, வெடிக்காத நிலையில் மீட்கப்பட்ட பலரக வெடிகுண்டுகள் - 1,164 ஆகியவற்றைப் படையினர் மீட்டுச் செயலிழக்கச் செய்துள்ளனர்.

இவ்வாறு கண்ணிகள் மீட்கப்பட்டதால் பெரும் எண்ணிக் கையானவர்களின் உயிர்கள், உடல்கள் அங்கங்கள் பாதுகாக்கப்பட்டுள்ளன. கடந்த வருடத்தில் மதிவெடியில் சிக்கி ஒருவரே உயிரிழந்தார். 46 பேர் காயமடைந்தனர்.

சாதாரண மக்களுக்கு ஏற்படும் இவ்வாறான தீய விளைவுகளைத் தடுக்கும் முகமாகவே பாதுகாப்பு படையினரால் 'மிதிவெடி இல்லை' என உறுதி செய்யப்படாத இடங்களில் எச்சரிக்கை விளம்பரப் பலகை தொங்கவிடப்பட்டுள்ளதுடன், மேலும் சில இடங்கள் நடமாடத் தடைசெய்யப்பட்டுள்ளன.

இவ்வாறான அறிவுறுத்தல்களைக் கவனத்தில் எடுக்காது தடைசெய்யப்பட்ட பகுதிக்குள் நடமாட முயற்சித்தவர்களே கூடுதலாகக் காயமடைந்துள்ளமை தெரியவந்துள்ளது. மேலும் தற்போது சமாதானச் சூழ்நிலை ஏற்பட்டுள்ள இந்தச் சந்தர்ப்பத்தில் இடம்பெயர்ந்த மக்கள் மீண்டும் தமது நிரந்தர வசிப்பிடங்களில் குடியமர விருப்பம் தெரிவித்துள்ளதை அடுத்து ஏனைய இடங்களிலும் புதைக்கப்பட்டிருக்கும் கண்ணிவெடிகளையும், மிதிவெடிகளையும் அகற்றும் நடவடிக்கைகளை படையினர் விரைவாக முன்னெடுத்துச் செல்கின்றனர் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-3)

### மீன்பிடித் தடை தொடர்பான

## அமைச்சர் ஜயலத்தின் கூற்றை மறுக்கின்றார் யாழ். தளபதி

யாழ்ப்பாணம்,பெப்.4

குடாநாட்டில் நடைமுறையில் உள்ள மீன்பிடித்தடை தொடர்பாக புனர்வாழ்வு, அகதிகள் மீள்குடியமர்வு அமைச்சர் ஜயலத் ஜெயவர்த்தனாவுக்கும் யாழ்.பாதுகாப்பு நடவடிக்கைத் தலைமையகத்தின் கட்டளை அதிகாரிக்கும் இடையில் கலந்துரையாடல் எதுவும் இடம்பெறவில்லை.

யாழ்.பாதுகாப்புத் தலைமையகம் மேற்கண்டவாறு அறிவித்துள்ளது.

விமானங்களின் பாதுகாப்புக் கருதி பலாலியை அண்டிய கடலில் மீன் பிடிக்க அனுமதிக்க முடியாது என்று யாழ்.தளபதி புனர்வாழ்வு அகதிகள் மீள்குடியமர்வு அமைச்சர் ஜயலத் ஜெயவர்த்தனாவிடம் தெரிவித்ததாக கடந்த முதலாம் திகதி வெளியான செய்தி தொடர்பாக பலாலி தலைமையகம் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

அமைச்சர் ஜயலத் ஜெயவர்த்தனாவுக்கும் யாழ். கட்டளை அதிகாரிக்கும் இடையில் கலந்துரையாடல் எதுவும் இடம் பெறவில்லை என்றும் -

இது தொடர்பாக கட்டளை அதிகாரி எந்தவித தகவல்களையும் தெரிவிக்கவில்லை என்றும் -

அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஐ-3)

## மீனவர் போராட்டத்துக்கு ஆசிரியர் சங்கம் ஆதரவு

யாழ்ப்பாணம்,பெப்.4

கடற்றொழிலாளர்கள் மேற்கொண்டுள்ள மறியல் போராட்டத்துக்கு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் தனது ஆதரவைத் தெரிவித்துள்ளது.

இந்தப் போராட்டத்தை முன்னெடுக்க எடுக்கப்படும் சகல நடவடிக்கைகளிலும் தமது சங்கமும் இணைந்து கொள்ளும் என்று சங்கத்தின் சிரேஷ்ட துணைப் பொதுச்செயலாளர் த. பஞ்சலிங்கம் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

கடற்றொழிலாளர்கள் தங்களுக்குச் சொந்தமான தொழிலைச் செய்வதற்கு கடந்த பல வருடங்களாகத் தடை விதிக்கப்பட்டுள்ளமை அடிப்படை மனித உரிமைகளை மீறிய செயலாகும், வடக்கு - கிழக்குப் பகுதியில் இலங்கையின் மொத்தக் கடற்கரைப் பிராந்தியத்தில் அரைப்பங்கிற்கும் மேற்பட்ட பகுதி அமைந்துள்ளது.

இப்பிரதேச மக்கள் கடந்த பல வருடங்களாக சொல்லொணாத் துயரங்களைத் தாங்கி விரக்தியின் விளிம்புக்குத் தள்ளப்பட்டுள்ளனர். அவர்கள தங்களது தொழிலைச் செய்ய அனுமதி மறுக்கப்பட்டதோடு தொழில் செய்வதற்குரிய உடைமைகளைப் பறிகொடுத்தும், வறுமையின் கோரப்பிடியில் சிக்கியும் தொழிலுக்காகச் சென்ற வேளையில் விலைமதிக்க முடியாத உயிரிழப்புகளையும் சந்தித்துள்ளனர்.

பொறுத்துப் பொறுத்து முடியாமல் தற்போது பொங்கியெழுந்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-3)

## கருணாரத்ன நேற்று சரண்!

கொழும்பு,பெப்.4

ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவின் இயக்குநர் நிஹால் கருணாரத்ன கண்டி பிரதம நீதிவான் முன் நேற்று சரண் அடைந்தார்.

தேர்தல் காலத்தில் அங்குரத்த பொலீஸ் நிலைப் பொறுப்பதிகாரியைக் கொலை செய்ய முயன்றதாகக் கூறப்பட்ட குற்றச்சாட்டுத் தொடர்பாக இவருக்கு எதிராக கண்டி நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்திருந்தது. (ஐ-3)

## 'பொல்கொட'வில் வந்த பொருள்களை காங்கேசன்துறையில் இறக்க முயற்சி

வடமராட்சி,பெப்.4

கடற்றொழிலாளர்களால் மேற்கொள்ளப்பட்டுவரும் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து பருத்தித்துறை துறைமுகத் தொழிலாளர்கள் கடந்த வியாழக்கிழமை தொடக்கம் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுவருவதால் பொருள்கள் இறக்கும் பணிகள் ஸ்தம்பித்துள்ளன.

கொழும்பிலிருந்து பொருள்களை ஏற்றிவந்த 'பொல்கொட' கப்பல் இரு தினங்களாக பருத்தித்துறை துறைமுகத்திற்கு வந்து பொருள்கள் இறக்கப்படாமலேயே காங்கேசன்துறைக்குத் திரும்பியது.

கப்பலில் கொண்டுவரப்பட்ட பொருள்களை காங்கேசன்துறை துறைமுகத்தில் இறக்குவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரியவருகிறது.

கடற்றொழிலாளர்களின் போராட்டத்திற்கு முடிவு கிடைக்கும்வரை தமது வேலை நிறுத்தம் தொடரும் என துறைமுகத் தொழிலாளர்கள் தெரிவித்தனர். (ஐ-15-117)


எம் நெஞ்சங்களில் தெய்வத்தாயாய் ஆன

ஓராண்டு நிறைவு

அன்னை மடியில் 03 - 08 - 1933



சிவனின் பாதங்களில் 17 - 01 - 2001

திருமதி
சிவசங்கரன் இராசம்மா

பத்து மாதம் சுமந்து பெற்றாள்
பகல் இரவாய் வளர்த்தாய்
விந்தகனாய் கல்வி பெற
வைத்தாய் மேதினில் நாம்
வாழ வழி செய்தாய்
அன்னையைப் போல் ஒரு தெய்வமில்லை.

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

மதவடி ஒழுங்கை,
திருநெல்வேலி.

(307)


## மற்றொரு கைதியும் மயக்கம்

யாழ்ப்பாணம்,பெப்.4

யாழ்.சிறைச்சாலையில் கடந்த முதலாம் திகதி தொடக்கம் உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்திருந்த கைதிகளில் மற்றுமொருவர் நேற்றுக்காலை மயக்கமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

கடந்த மூன்று மாதங்களுக்கு முன்னர் பொலீஸாரினால் கைது செய்யப்பட்டதாகக் கூறப்படும் நடராஜா அகிலகுமார் (ஆனந்தம் வடலி, அரியாலை) என்ற இளைஞனே நேற்று முற்பகல் 11 மணியளவில் மயக்கமடைந்தவராவார்.

பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் பொலீஸாரால் கைது செய்யப்பட்ட இவர் யாழ்.நீதிவான் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டிருந்தார். இவர் கடந்த மூன்று மாதகாலமாக யாழ்.சிறைச்சாலையில் தடுத்து வைகைப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-6)



சர்வதேச லயன்ஸ் சேவை தினத்தை முன்னிட்டு பிராந்தியம் 10ஐச் சேர்ந்த லயன்ஸ் கழகங்களினால் பூளாயில் இடம் பெயர்ந்து இயங்கி வரும் கைதடி முதியோர் இல்லத்திலுள்ள முதியவர்களுக்கு மதிய உணவு வழங்கப்பட்டது. பிராந்தியத் தலைவர் லயன் செ.ஞானராஜாவுடன் ஏனைய கழக பிரமுகர்களும் உணவு வழங்குவதைப் படத்தில் காணலாம். *(படம்:சண்டிலிப்பாய் செய்தியாளர்)*

## மீண்டும் யுத்தம் என்றால் புலிகளின் சீருடையில் களத்தில் இறங்குவேன்!

### சந்திரநேரு எம்.பி. கூறுகிறார்

கொழும்பு,பெப்.4

"அரசு தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேசி நாட்டில் நிரந்தர சமாதானத்தைத் தோற்றுவிக்க வேண்டும். பேச்சுக்கான முன்னெடுப்புகள் தோல்வியுற்றால் நாட்டில் யுத்தம் தொடர்ந்து கொண்டேயிருக்கும் அத்தகைய நிலை வருமானால் தமிழீழ விடுதலைப் புலிகளின் சீருடையை அணிந்து சந்திரநேருவான நானே களமிறங்கிப் போராடுவேன்."

- இவ்வாறு திகாமடுமல்ல மாவட்ட தமிழ்த் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் அரியநாயகம் சந்திரநேரு கூறினார்.

அம்பாறை மாவட்ட வெகுஜன ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நேற்று நடைபெற்ற சமாதானப் பேரணியின் இறுதியில், காரைதீவு சண்முக வித்தியாலயத்தில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கக் கல்முனைக் கிளைத்தலைவர் வீ. ஜெயநாதன் தலைமையில் பொதுக் கூட்டம் நடைபெற்றது.

நேற்றுக்காலை பெரிய நீலாவணை தாமரைமடுச் சந்தியிலிருந்து ஆரம்பமான சமாதானப் பேரணியில் பல்லாயிரக்கணக்கான தமிழ், முஸ்லிம் மக்கள் கலந்துகொண்டனர். நாடாளுமன்ற உறுப்பினர் அரியநாயகம் சந்திரநேரு தலைமையில் நடைபெற்ற இந்தப் பேரணி கல்முனைக்குக்குடி - சாய்ந்தமருது பிரதான வீதி வழியாக வந்தபோது ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் மயோன் முஸ்தபாவும் பேரணியில் இணைந்து தமது ஆதரவை வெளிப்படுத்தினார்.

நீலாவணை, மருதமுனை, கல்முனை, கல்முனைக் குடி, சாய்ந்தமருது, மாளிகைக்காடு, காரைதீவு, முதலான பகுதிகளில் சகலவர்த்தக நிலையங்களும் மூடப்பட்டு பேரணிக்கு ஆதரவு தெரிவிக்கப்பட்டது. (ஐ-14)

## ஒற்றுமையாலும் நட்புறவாலும் புதுயுகம் ஒன்றைப் படைப்போம்!

### பிரதமரின் சுதந்திரதினச் செய்தி

கொழும்பு,பெப்.4

"ஒற்றுமை நீக்கியதும் சமூகங்களிடையே சந்தேகம் மேலோங்கியதுமே நாம் எதிர்கொள்ளும் இன்றைய வடக்கு - கிழக்கு நெருக்கடியின் அடிப்படை. ஒற்றுமையாலும் நட்புறவாலும் புதுயுகம் படைக்க உறுதி பூணுவோம்."

இவ்வாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தமது சுதந்திரதினச் செய்தியில் குறிப்பிட்டிருக்கிறார்.

அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

இற்றைக்கு 54 வருடங்களுக்கு முன்னர் இந்த நாட்டுக்கு சுதந்திரத்தைப் பெறுவதற்காக நாம் எதிர் நோக்கிய பாரிய தடை, பல்வேறு இனங்களுக்கிடையே இருந்த ஒற்றுமையின்மையே ஆகும். டி.எஸ்.சேனாநாயக்க சகல இனமக்களிடையேயிருந்த ஒற்றுமை இன்மையை நீக்கி சுதந்திரத்தைப் பெற்றுக்கொள்ளும் முயற்சியில் அவர்கள் அனைவரையும் ஒன்றிணைத்துக் கொண்டார். அதனால 1948 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 04 ஆம் திகதி சுதந்திர இலங்கையை எம்மால் பெற முடிந்தது. ஆனால் பின்னர் உருவான பல்வேறு சமூக, பொருளாதார சக்திகளின் எதிரே அந்த ஒற்றுமை நலிவுற்றது. ஒருவரையொருவர் சந்தேகக் கண்கொண்டு நோக்கும் நிலைமை மேலோங்கியது. இன்று நாம் அனைவரும் எதிர்கொண்டுள்ள வடக்கு - கிழக்கு நெருக்கடிக்கு அடிப்படை இதுதான்.

மீண்டும் அந்த ஒற்றுமையை உருவாக்க நாம் உறுதி பூண்டுள்ளோம். அது இலகுவானதொரு காரியமல்ல. ஆயினும் இக் கஷ்டமான பணியில் வெற்றி கொண்டு அனைத்து இன மக்களையும் ஒற்றுமையாலும், நட்புறவாலும் ஒன்று சேர்க்கும் யுகத்தைப் படைக்க இச்சுதந்திர தினத்தில் நாம் உறுதி பூணுவோம்.

இப்படிப் பிரதமர் தமது செய்தியில் குறிப்பிட்டிருக்கிறார். (ஐ)



அண்மையில் மாகாண சமய இலக்கிய விருது பெற்ற 'கீர்த்தன மாலை' நூலாசிரியர் சங்கீத பூசணம், கலைஞானகேசரி ஏ.கே.ஏரம்பமூர்த்திக்கு தென்மராட்சி பிரதேச செயலர் பு.சுந்தரம்பிள்ளை விருதை வழங்குவதைப் படத்தில் காணலாம். (ஐ-180)



நைஜீரியாவின் லாகோஸ் நகரில் கடந்த வாரம் இடம்பெற்ற ஆயுதக் களஞ்சிய வெடிவிபத்தில் பலியான சிலரின் சடலங்கள் அடங்கிய சவப் பெட்டிகள், வீடுகள் தகர்ந்துவிட்டதால் வீதியோரங்களில் வைக்கப் பட்டிருக்கும் காட்சி.

### ஆயுதக் களஞ்சியத் தீ விபத்து இடம்பெற்ற

# நைஜீரியாவின் லாகோஸ் நகரில் பழங்குடியினர் இடையே கலவரம்!

### உயிரிழப்புக்கள் நூற்றுக்கணக்கில்

லாகோஸ்,பெப்.4

நைஜீரியாவில் இராணுவ ஆயுதக் களஞ்சியத்தில் தீப்பற்றிக் கொண்டதில் சுமார் 1000 பேர்வரை உயிரிழந்த லாகோஸ் நகரில் நேற்று மூண்ட இனக்கலவரத்துக்கு நூற்றுக் கணக்கானோர் பலியாகியுள்ளதாகக் கூறப்படுகிறது.

ஹௌஸா மற்றும் யோருபா ஆகிய இரு பழங்குடியினரிடையே இந்த இனமோதல் ஏற்பட்டுள்ளது. தொழிலாளர்கள் அதிகம் வசிக்கும் முஷீம் பகுதியில் தொடாந்து துப்பாக்கிச் சூட்டுச் சத்தங்கள் கேட்பதாகவும் எரியும் கட்டடங்களில் இருந்து கிளம்பும் கரும் புகைமண்டலம் வானில் நிறைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கலவரப் பகுதியில் இருந்து நூற்றுக்கணக்கானவர்கள் வெளியேறி வருகின்றனர். தாம் கடந்துவந்த இடங்களில் கலவரத்தில் கொல்லப் பட்டவர்களின் சடலங்கள் நிறைந் திருப்பதாக அவர்கள் கூறினர்.

கலவரம் மூண்டதற்கான காரணங்கள் எதுவும் சரியாகத் தெரியவரவில்லை.

நைஜீரியாவில் வர்த்தகத் தலைநகரான லாகோஸில் கடந்த வாரம் இராணுவ ஆயுதக் களஞ்சியம் தீப்பற்றி வெடித்துச் சிதறியதில் ஏற்பட்ட மரண அவலம் அடங்குவதற்கு முன்னர் இனக்கலவரத்தால் உயிரிழப்புகள் ஏற்பட்டுள்ளன.

1999இல் நைஜீரியாவில் இராணுவ ஆட்சி முடிவுக்கு வந்தபின்னர் லாகோஸ் நகரில், நாட்டின் பெரும்பான்மை இனக்குழுக்களான ஹௌஸா மற்றும் யோருபா இடையே அடிக்கடி இன மோதல்கள் நடந்துவருகின்றன.

இதற்கிடையில், இராணுவ ஆயுதக் களஞ்சியத் தீ விபத்தை அடுத்து செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவினருக்கு, நிவாரண உதவிகள் அனைத்தையும் தம்மிடம் தருமாறு இராணுவம் உத்தரவிட்டது. பொது மக்களுக்கு அளவுக்கதிகமாக நிவாரணம் வழங்கப்படுவதாக இராணுவம் கூறியது. இதனால் தனது நிவாரணப் பணிகளை செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு இடைநிறுத்தியுள்ளது. (ஒ)

### அமெரிக்கச் செய்தியாளர் கடத்தப்பட்ட சம்பவம்

# இந்திய உயர் அதிகாரிகளுடன் கடத்தல்காரர்களுக்குத் தொடர்பு!

### குற்றஞ்சாட்டுகிறது பாகிஸ்தான்

இஸ்லாமாபாத்,பெப்.4

அமெரிக்கப் பத்திரிகையாளர் டானியல் பேர்லைக் கடத்திச் சென் றவர்கள் இந்திய உயர் அதிகாரிகள் சிலருடன் தொலைபேசிமூலம் தொடர்புகொண்டமை கண்டுபிடிக் கப்பட்டுள்ளதாக பாகிஸ்தானிய வெளியுறவு அமைச்சர் அப்துல் சதார் குற்றஞ்சாட்டியுள்ளார்.

கடந்த வாரம் பாகிஸ்தானில் கடததப்பட்ட அமெரிக்காவின் 'போல் ஸ்ரீட்' பத்திரிகைச் செய்தியாளர் டானியல் பேர்ல் குறித்து முன்னுக்குப்பின் முரணான தகவல்கள் வெளியாகிக் கொண்டிருக்கும் சமயததில், பாகிஸ்தானிய அமைச்சர் இந்தக் குற்றச்சாட்டை வெளியிட்டுள்ளார்.

பாகிஸ்தானின் உள்துறை அமைச்சர் ஹைதர் இது தொடர்பாகக் கூறுகையில் - கடத்தல்காரர்கள் இந்தியாவில் எவருடன் தொடர்பு கொண்டனர் என்பது தெளிவாகத் தெரியவில்லை என்று தெரிவித்துள்ளார். பாகிஸ்தானை அமெரிக்காவின் கோபத்துக்கு இலக்காக்க இந்தியாவின் ஆதரவுடன் நடத்தப்படும் நாடகமே கடத்தல் சம்பவம் என்று பாகிஸ்தானிய மத அடிப்படைவாதப் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன.



டானியல் பேர்ல்

பாகிஸ்தானின் இந்தக் குற்றச்சாட்டை இந்தியா முற்றாக நிராகரித்துவிட்டது. ஆயினும், இது தொடர்பாக விசாரணை நடத்தப்படுவதாகவும் -

உண்மை விரைவில் வெளி வரும் என்றும் -

இந்தியப் பிரதமர் வாஜ்பாய் தெரிவித்தார்.

இந்தியா கோரியிருந்த இருபது பயங்கரவாதிகளை ஒப்படைக்கத் தவறிய பாகிஸ்தான், தற்போது இத்தகைய குற்றச்சாட்டைக் கூறியிருப்பது கேலிக்குரியதாகும் - என்று இந்திய ஆளுங்கட்சியான பாரதீய ஜனதா தெரிவித்துள்ளது. (ஒ-9)

## பிரிட்டனில் வெள்ள அபாயம்

லண்டன்,பெப்.4

பிரிட்டனின் பல பகுதிகளில் அடைமழை பெய்துவருவதால் அங்கு வெள்ளப்பெருக்கு அபாயம் தோன்றியுள்ளது.

லண்டன் உட்பட பிரதான நகரங்கள் பலவற்றிலும் வெள்ளப் பெருக்கு ஏற்படத் தொடங்கியுள்ளது.

காலநிலை மேலும் சீரற்றே இருப்பதால் மழை தொடர்ந்து பெய்யும் என்று பிரிட்டிஷ் வானிலை ஆராய்ச்சி நிலையம் அறிவித்துள்ளது. (ஒ)

## ஜோர்டான் விமானம் சென்னையில் ஏற்படுத்திய பரபரப்பு!

சென்னை,பெப்.4

சென்னை விமான நிலையத்தில் கடந்த வெள்ளிக்கிழமை திடீரெனத் தரையிறங்கிய ஜோர்டான் நாட்டு விமானத்தால் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

பங்களாதேஷிலிருந்து ஹஜ் யாத்திரை செல்வோரை ஏற்றிச் செல்ல இந்த விமானம் ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்ததாகவும் -

ஆனால் டாக்கா சென்றடைய தாமதமானதால், அங்கு தரையிறங்க அனுமதி மறுக்கப்பட்டதாகவும் -

இதற்கிடையில் இந்திய வான் வெளியில் இந்த விமானம் பறப்பதற்கு அனுமதிக்கப்பட்டிருந்த கால அவகாசம் முடிவடைந்து விட்டிருந்ததாகவும் -

விமானிகள் தெரிவித்தனர்.

மும்பை, கொழும்பு விமான நிலையங்களிலும் தரையிறங்க அனுமதி கிடைக்காததால் - எரிபொருள் தீரும் நிலையில் - சென்னை விமான நிலையத்தில் தரையிறக்க நேர்ந்ததாக அவர்கள் மேலும் கூறினர்.

இதனையடுத்து, மனிதாபிமான அடிப்படையில், எரிபொருள் நிரப்பப்பட்டு, இந்தியாவின் வேறு எந்த விமான நிலையத்திலும் தரையிறங்கக் கூடாது என்ற எச்சரிக்கையுடன் அந்த ஜோர்டான் நாட்டு 'ஜெற்' விமானம் புறப்பட்டுச்செல்ல நேற்று முன்தினம் அனுமதிக்கப்பட்டது.

திடீரென்று தரையிறங்கிய அந்த விமானத்தைச் சுற்றிவளைத்த இந்தியப்படையினர் அதனுள் தீவிர சோதனை நடத்தி, விமானிகளையும் விசாரித்த பின்னரே அதனைப் புறப்பட்டுச்செல்ல அனுமதித்தனர்.(ஒ-9)

# கடத்தப்பட்டவர் குறித்து முரண்பட்ட தகவல்கள்

கராச்சி,பெப்.4

பாகிஸ்தானில் கடத்தப்பட்ட அமெரிக்கப் பத்திரிகையாளரின் நிலை குறித்து முன்னுக்குப்பின் முரணான தகவல்கள் வெளியாகி வருகின்றன.




கராச்சியின் சேமக்காலை ஒன்றில் பேர்லின் சடலத்தை தேடும் பாகிஸ்தானியப் பொலீஸார்.

கடத்தப்பட்ட டானியல் பேர்லைக் கொன்றுவிட்டு சேமக்காலை ஒன்றில் அவரது உடலை வீசி எறிந்துவிட்டதாக ஒரு குழு தெரிவித்ததையடுத்து, கராச்சி நகரில் உள்ள கல்லறைகள் அனைத்திலும் பேர்லின் உடலைப் பொலீஸார் தேடி வருகின்றனர், ஆனால் இதுவரை உடல் கிடைக்கவில்லை.

பாகிஸ்தானில் இயங்கும் தீவிரவாத அமைப்பான ஜமாத் அல் வக்ராவின் தலைவர் ஷேக் முபாரக் அலி கிலானியை பேட்டிக்காகச் சந்திக்கச் சென்றபோதே பேர்ல் கடத்தப்பட்டதாகக் கூறப்படுகிறது.

வெளிநாட்டுச் செய்தி நிறுவனங்களுக்கு பேர்ல் தொடர்பாக தீவிர வாதிகளின் பெயரில் அனுப்பப்படும் மின் அஞ்சல் செய்திகள் முன்னுக்குப்பின் முரணாக உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலையில், டானியல் பேர்ல் இன்னமும் உயிரோடு இருப்பதாகத் தாம் நம்புவதாக அவர் பணியாற்றும் 'வோல் ஸ்ரீட் ஜேர்னல்' பத்திரிகையின் நிர்வாக ஆசிரியர் போல் ஸ்ரெய்ஜர் நம்பிக்கை தெரிவித்தார்.

# ஆப்கானிஸ்தானில் பிடிபட்ட 5ஆவது பிரிட்டிஷ் பிரஜை!

ஆப்கானிஸ்தானில் தலிபான்களுடன் இணைந்து போராடியதாகக் கூறப்படும் மற்றொரு பிரிட்டிஷ் பிரஜை கைதுசெய்யப்பட்டுள்ளார்.

பஸ்தூன் பழங்குடிப் படையினரால் கந்தகாரில் பிடிக்கப்பட்ட ஜமால் உதீன் (வயது 35) என்ற அந்த நபர் அமெரிக்கப் படைகளிடம் ஒப்படைக்கப்பட்டு தற்போது அமெரிக்காவின் குவாண்டனாமா தளத்தில் சிறை வைக்கப்பட்டுள்ளார். இதனை அமெரிக்க வெளியுறவு அலுவலக அதிகாரி ஒருவர் உறுதிப்படுத்தியுள்ளார். ஜமால் உதீனுடன் சேர்த்து இதுவரை 5 பிரிட்டிஷ் பிரஜைகள் தலிபான்கள் அல்லது அல்கெய்டாவினருடன் இணைந்து செயற்பட்டதாக ஆப்கானிஸ்தானில் கைதுசெய்யப்பட்டு, குவாண்டனாமாவில் சிறைவைக்கப்பட்டுள்ளனர்.

ஷவீக் ரசூல் (வயது 24), ஆசிப் இக்பால் (வயது 20), பெரோஸ் அபாசி (வயது 22), ருகால் அஹமட் (வயது 20) ஆகியோர் ஏற்கனவே ஆப்கானிஸ்தானில் அமெரிக்கப் படையினரால் கைதுசெய்யப்பட்ட பிரிட்டிஷ் பிரஜைகளாவர். இவர்கள் வேறு நாடுகளில் கல்வி கற்றுக்கொண்டிருந்த சமயத்திலேயே, இஸ்லாமிய மதத்தில் சேர்ந்து தமது பெயர்களையும் மாற்றிக்கொண்டதாகக் கூறப்படுகிறது.



கைதான பிரிட்டிஷ் பிரஜைகள்

# ஆர்ஜென்ரீனாவில் வங்கிகள் இழுத்து மூடப்படும் அபாயம்!

போனர்ஸ்அயர்ஸ்,பெப்.4

ஆர்ஜென்ரீனாவில் வங்கிகளின் செயற்பாடுகள் முற்றாகச் செயலிழந்துவிடும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

தாம் சேமித்த பணத்தை அரசை நம்பி வங்கிக் கணக்குகளில் வைத்திருக்க ஆர்ஜென்ரீன மக்கள் தயா ரில்லை என்று கூறப்படுகிறது. அத்துடன் வங்கிக் கணக்குகளில் உள்ள பணத்தை மீளப்பெறுவதற்கு அரசு விதித்திருந்த உச்சவரம்பு அந்நாட்டின் அரசமைப்புச் சட்டத்தை மீறுவதாக உயர் நீதிமன்றம் கடந்த வெள்ளிக்கிழமை தெரிவித்துவிட்டது.



வங்கியில் இட்ட பணத்தை மீளப்பெறுவதற்காகக் காத்திருக்கும் ஆர்ஜென்ரீனர்கள்.

இதனால் வங்கிகளில் தத்தமது கணக்குகளில் உள்ள பணத்தை முற்றாகத் திரும்பப் பெற மக்களுக்கு வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

ஒரேசமயத்தில் தமது கணக்கு களில் உள்ள பணம் முழுவதையும் அனைத்து வாடிக்கையாளரும் திரும்பப்பெற்றுக்கொள்வது எண்ணிப் பார்க்கமுடியாத அச்சத்தை வங்கிகளுக்கு உருவாக்கியிருப்பதாக பொருளாதார வல்லுநர்கள் தெரிவித்துள்ளனர்.

மேலை நாடுகள், உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் ஆகியவற்றின் ஆலோசனைப்படி திறந்த பொருளாதாரக் கொள்கையைக் கடைப்பிடித்த ஆர்ஜென்ரீனா இன்று பெரும் பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவிக்கும்போது உலக வங்கியும், சர்வதேச நாணய நிதியமும் மௌனம் சாதித்து வருவதாகக் கூறப்படுகிறது. (ஒ)

# முப்பது வருடங்களின் பின் கம்போடியாவில் தேர்தல்கள்

### வன்முறைகளில் 20பேர் பலி

பெனோம்,பெப்.4

கம்போடியாவில் சுமார் 30 ஆண்டுகளின் பின்னர் தேர்தல்கள் நடைபெறுகின்றன. உள்ளூராட்சி நிர்வாகிகளை தேர்ந்தெடுப்பதற்கான இத்தேர்தல்களில் ஆளும் கம்போடிய மக்கள் கட்சி பின்னடைவைச் சந்திக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

ஆயிரத்து அறுநூறுக்கும் மேற்பட்ட உள்ளூராட்சி அமைப்புகளுக்கான பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்க சுமார் 50 லட்சம் கம்போடிய மக்கள் தமது வாக்குரிமையை தற்போது பயன்படுத்துகின்றனர். கம்போடியாவில் தற்போதுள்ள உறுதியற்ற ஜனநாயக நடைமுறையில் இந்தத் தேர்தல்கள் பாரிய முன்னேற்றமாகக் கருதப்படுகிறது. தேர்தல் வன்முறைகளில் 20பேர் வரை கொல்லப்பட்டதாகவும் - அரசுதரப்பு மிரட்டல்களில் ஈடுபடுவதாகவும் கூறப்படுகிறது.

கம்போடியாவில் இதுவரை ஆளும் கம்போடிய மக்கள் கட்சியே உள்ளூர் நிர்வாக சபைகளுக்கு உறுப்பினர்களை நியமித்துவந்தது. சர்வாதிகாரி பொல்பொட்டின் கெமருஜ் இயக்கம் 1979இல் நாட்டைவிட்டு விரட்டப்பட்டதிலிருந்து கம்போடிய மக்கள் கட்சியே அங்கு தேர்தலற்ற கம்யூனிஸ ஆட்சியை நடத்திவருகிறது.

(ஒ)

## சின்னஞ்சிறு விளம்பரம்

### மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 37 வயதுடைய, ஒரு கால் போலியோ பாதிப்புள்ள, கமம் செய்யும் மணமகனுக்கு மணமகள் தேவை. சீதனம் தேவையில்லை. தொடர்பு: கி.மகிந்தன், சுதேச வைத்தியசாலை, கந்தரோடை, சுன்னாகம். (278)

### வகுப்புகள்

கணிதத்தில் சிறந்த பெறுபேறு அடைய வேண்டுமா? கணிதம் கற்பிப்பதில் 40 வருடங்களுக்குமேல் அனுபவம் வாய்ந்த ஆசிரியரினால் மிகக் குறுகியகாலத்தில் சிறந்த பெறுபேறுகளுக்கு உத்தரவாதம் அளிக்கப்பட்டு, அடிப்படை அறிவிலிருந்து கற்பிக்கப்படும். O/L, 10, 9, 8, 7, 6. இல.8, பிளர்ச்சஸ் ஒழுங்கை, சுண்டுக்குளி. மாணவர் வசதிக்கேற்ப நேரம் ஒதுக்கப்படும். (123)

### விற்பனைக்கு

100% தரமான நல்லினப் புகையிலை (வடமராட்சிக் சுரன், தட்டையன்) மற்றும் மிளகாய் நாற்றுக்கள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: N.சிவலிங்கம், பலாலி வீதி (பெற்றோல் செற் முன்பாக), உரும்பிராய். (227)

11/2 வயது - 2 வயது நிரம்பிய டாய்சொன் கறுப்பு, பிறவுண் நிறமுடைய பெண் நாய்களும் 11/2 மாதம நிரம்பிய டாய்சொன் பிறவுண் குட்டிகளும், சிலிக்கி, வெள்ளை, சாம்பல் நிறமுடைய கோழிகளும் விற்பனைக்கு உண்டு. இல.70, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். (254)

### கல்கிசையில் ஜேர்மன் நிறுவன மதிப்பீட்டு ஆய்வரங்கு

யாழ்ப்பாணம்,பெப்.4

யாழ்.மாவட்டத்தில் ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனத்தினால் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்ட, இனி மேற்கொள்ளப்படவுள்ள புரைமைப்புத் திட்டங்கள் தொடர்பான மதிப்பீட்டு ஆய்வரங்கு நாளை செவ்வாய்க்கிழமையும மறுநாள் புதன்கிழமையும் கல்கிசையில் நடைபெறவுள்ளன.

இந்த மதிப்பீட்டு ஆய்வரங்கில் ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவன யாழ். அலுவலகங்களில் கடமையாற்றும் 8 உத்தியோகத்தர்களும், யாழ் மாவட்டத்தில் இந்த நிறுவனத்தில் பங்கேற்று செயற்படும் அரச, அரச சார்பற்ற பிரதிநிதிகள் 12 பேரும் கலந்துகொள்ளவுள்ளனர்.

இந்த முக்கிய கூட்டத்துக்கு ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனத்தின் விசேட பிரதிநிதிகள் இருவர் ஜேர்மனியில் இருந்து கொழும்புக்கு வந்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (க-180)

### அகதி முகாம்கள் வெள்ளத்தில்!

கடந்த மூன்று தினங்களாகப் பெய்த கடும் மழையினால் வடமராட்சிப் பிரதேசத்தில் உள்ள அகதி முகாம்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. அங்கு தங்கியிருந்த மக்கள் அருகில் உள்ள ஆலயங்கள், பாடசாலைகள் மற்றும் உறவினர் வீடுகளில் தஞ்சமடைந்துள்ளனர்.

முன்னர் ஏற்பட்ட பெரு வெள்ளம் காரணமாக வேறு இடங்களில் தங்கியிருந்த அகதிமுகாம் மக்கள் அண்மையிலேயே தமது வீடுகளுக்குத் திரும்பியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (க-1(7)


### இந்துமத குருமார் ஒன்றியத்தின் நூல் வெளியீடு

யாழ்.வண்ணை நீராவியடி நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு பிரம்மஸ்ரீ பரமேஸ்வர மனோகரக் குருக்கள் தலைமையில் நடைபெறும் சர்வதேச இந்துமத குருமார் ஒன்றிய மகாசபைக் கூட்டத்தில் "கல்யாணோற்சவ பத்ததி" என்னும் நூல் வெளியிட்டுவைக்கப்படும்.

சர்வதேச இந்துமத குருபீடாதிபதி பிரம்மஸ்ரீ ஐ.மகேஸ்வர சிவாச்சாரியாரின் ஆசிரியுரையைத் தொடர்ந்து யாழ்.பல்கலைக்கழக கலைப பீடாதிபதி பேராசிரியர் பிரம்மஸ்ரீ ப.கோபாலகிருஷ்ணஐயர் நூல் வெளியீட்டுரை நிகழ்த்துவார். நூலின் அறிமுகவுரையை இணுவில் தர்ம சாஸ்தா குருகுல அதிபர் பிரம்மஸ்ரீ தா.மகாதேவக் குருக்கள் நிகழ்த்துவார். (க-152)

## முதலாம் வருட நினைவலைகள்

அன்னை மடியில் 02 ☆ 11 ☆ 1974



அரன் அடியில் 16 ☆ 01 ☆ 2001

### அமரர் சா.இந்திரசர்மா

திதி: 04.02.2002

மைந்தன் என்றழைக்க மண்ணுலகில் இனி இல்லை!
தம்பி என்றழைக்க தாரணிதனில் இனி ஒருவர் இல்லை!
அண்ணா என்றழைக்க அவனிதனில் இனி ஒருவர் இல்லை!
*உங்கள் ஆத்மா சாந்திபெற நித்தம் ஆண்டவனை வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.*

பிரிவால் துயருறும்:
அம்மா, அண்ணா, அண்ணி, பிள்ளைகள்,
அக்கா, தங்கை, மைத்துனர்,
மருமகள், மருமகன்,
உற்றார், உறவினர், நண்பர்கள்.

சா.சத்தியோஜாதசர்மா,
*கண்ணகை அம்மன் கோயில்,*
*வட்டுக்கோட்டை.*
(289)

## ஓராண்டு நினைவஞ்சலி

பிறப்பு 29 - 02 - 1937



இறப்பு 15 - 01 - 2001

### அமரர் கணபதி பொன்னுத்துரை

அன்பும் பண்பும் மிக்க அன்புத் தெய்வமே!
நீங்கள் மறைந்து ஓராண்டு ஆயினும்
உங்கள் நினைவு எங்கள் நெஞ்சைவிட்டு அகலாது
என்றும் நினைவில் நிறைந்திருக்கும்.
ஆத்மா சாந்தி அடைவதாக!
*ஓம் சாந்தி!*

பிரிவால் துயருறும்:
அன்பு மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்,பேரப்பிள்ளைகள்.

*உரும்பிராய் வடக்கு,*
*மடத்தடி.*
(286)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் சபிண்டீகரண அழைப்பும்

தோற்றம் 22 - 08 - 1928



மறைவு 05 - 01 - 2002

### திருமதி நாகேஸ்வரி முத்துக்குமாரு

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவர் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்"

அன்புடனும் பண்புடனும் பாரில் வாழ்ந்து
மறைந்த பாசமுள்ள தாயே! எம்முடன் நீங்கள்
இருந்த நாள்கள் என்றும் எம் நெஞ்சை விட்டகலா!

உங்கள் ஆத்மசாந்திக்காக அம்பிகையை
வேண்டுகிறோம்.

அன்னார் நோயுற்றிருந்தபோதும், பின்னர் இறுதிக்கிரியைகளில் பங்குபற்றியும் மற்றும் பல வழிகளில் எமக்கு உதவிய அனைவருக்கும் நன்றிகளைத் தெரிவிப்பதுடன், இன்று *(04.02.2002) திங்கட்கிழமை நடைபெறும் சபிண்டீகரண நிகழ்விலும், மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும்வண்ணம்* எமது உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

உங்கள் நினைவுடன்:
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
உற்றார், உறவினர்.

*சூராவத்தை,*
*சுன்னாகம்.*
(282)

## பிறந்தநாள் வாழ்த்து

04.02.2002

HAPPY



BIRTHDAY

### செல்விகள் இ.லக்ஷாந்தி, இ.லாவண்யா

**திரு. திருமதி கு.இரத்தினபாலா ~ சுரேஸ்வரி**
தம்பதிகளின் செல்வப் புதல்விகள்
**இ.லக்ஷாந்தி, இ.லாவண்யா**

தங்கள் 7ஆவது, 6ஆவது பிறந்த நாள்களைச் சண்டிலிப்பாயில் உள்ள தங்கள் இல்லத்தில் இன்று (04.02.2002) திங்கட்கிழமை வெகு சிறப்பாகக் கொண்டாடுகிறார்கள்.

இவர்களை அம்மா, அப்பா, அம்மம்மா, அம்மப்பா, அப்பப்பா, சித்தி, சித்தப்பா, மாமா, மாமி, பெரியப்பாமார், பெரியம்மாமார் அனைவரும் சீரும் சிறப்புடனும் பல்லாண்டுகாலம் நலமுடன் வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

இவர்களது பிறந்தநாள் வைபவத்தில் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

"சண்முக வாசா",
சண்டிலிப்பாய். (270) **திரு. திருமதி கு.இரத்தினபாலா.**


## Jaffna College Institute of Technology

Vaddukoddai, Jaffna, Sri Lanka

STUDENTS ARE WELCOME
for the following courses

**Diploma Course**

❖ Diploma in Computer Programming & Data Processing
Duration : 1Year (full time )

**Certificate Courses in Business & Scientific Applications**

❖ MS Word
❖ MS Excel
❖ MS Access
❖ MS Power Point
❖ Visual Basic 6.0
❖ FoxPro
❖ JAVA
❖ C/C++
❖ Pascal
❖ dBase III



Duration : 3 - 4 Months

**Note:-**

- Open University Exemption for our Diploma Courses
- Our Diploma Guide the students to the Examination of the following bodies
  - Australian Computer Society (ACS)
  - British Computer Society (BCS)
- Facilities:- Library, Hostel & Sports

Application forms are avilable at
✦ *JCIT, Vaddukoddai*
✦ *Undergraduate department, Jaffna College (Hospital Road, Jaffna)*

**Director,**
**Jaffna College Institute of Technology,**
**Vaddukoddai.** (C/20593)


## 31 ஆவது நாள் நினைவஞ்சலி

மலர்வு 24 - 09 - 1957



உதிர்வு 04 - 01 - 2002

### அமரர் வல்லிபுரம் கதிரமலை

எங்களை நீங்கள் விட்டுப்பிரிந்தாலும்
தங்கள் நினைவலைகளிலிருந்து நாம் பிரியவில்லை.
*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

பிரிவால் துயருறும்:
அக்கா, பிள்ளைகள்.

*பொற்றொழிலாளர் வீதி,*
*சங்கத்தானை,*
*சாவகச்சேரி.*
(272)

## உதயன்

### பெப்ரவரி - 4

நாட்டின் 54ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு சிறு குற்றங்களுக்காக சிறைத் தண்டனை பெற்று வந்த இரண்டாயிரத்து ஐந்நூறு கைதிகளுக்குப் பொது மன்னிப்பு அளித்து அவர்களை விடுதலை செய்திருக்கிறார் ஜனாதிபதி.

ஆண்டு தோறும் சுதந்திர தினத்தை ஒட்டி கைதிகளை விடுவிப்பது ஒரு சம்பிரதாய நிகழ்ச்சியாக மாறிவிட்டிருந்தாலும்கூட எந்தக் கைதிக்கும் பொது மன்னிப்பு அளிக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்குரியதே.

நாட்டில் நாடாளுமன்ற ஆட்சி அதிகாரம் கைமாறிய போதிலும் தனக்கேயுரிய நிறைவேற்று அதிகாரங்களுடன் ஜனாதிபதி தொடர்ந்தும் ஆட்சியில் செல்வாக்கு மிக்கவராகத திகழ்கிறார்.

ஒரு புறம் கைதிகள் பொது மன்னிப்பு அளித்து விடுவிக்கப்பட்டிருக்கின்ற செய்தி. இன்னொரு புறம் வடக்கு - கிழக்கிலும் தென்னிலங்கையிலும் உள்ள சிறைகளில் தமிழ்க் கைதிகளின சாத்விகப் போராட்டங்கள் தொடர்பான செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன.

தமிழ் மக்களின் சுதந்திர வேட்கையை போரினால் அடக்கி ஒடுக்கிவிட முற்பட்ட அரசுகளால் அமுலுக்கு கொண்டுவரப்பட்ட அடக்குமுறையான சட்டங்களின் கீழ் பல நூற்றுக்கணக்கான தமிழ் இளைஞர்களும், யுவதிகளும் சிறைகளில் விசாரணை இன்றி நீண்ட காலம் தடுத்து வைக்கப்பட்டிருக்கின்றனர்.

நாடாளுமன்றத்தில் அவசரகால நிலையை நீடிக்கும் பிரேரணையை நிறைவேற்றுவதற்கான பலத்தை கடந்த ஆண்டில் அரசியல்ரீதியாக சந்திரிகா அரசு இழந்தபோது அவசரகால நிலை காலாவதியானது. ஆனால் அதன்கீழ் மேற்கொள்ளப்பட்டுவந்த அடக்குமுறை நடவடிக்கைகள் தொடர்வதற்கு பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் வாய்ப்பளித்தது. அந்தச் சட்ட விதிகளின் கீழ்தான் புதிய அரசின் ஆட்சியிலும் அந்தக் கெடுபிடிகள் தொடர்கின்றன. பல நூற்றுக்கணக்கான கைதிகள் சிறையில் வாட இந்தச் சட்டமே இன்னும் காரணமாய் இருக்கிறது.

யாழ்ப்பாணத்திலும், மட்டக்களப்பிலும் கைதிகள் ஆரம்பித்திருக்கின்ற உண்ணாவிரதப் போராட்டம் நாட்டின் சுதந்திரதினமான இன்றும் தொடர்கிறது. இந்தக் கைதிகள் தம்மை விடுதலை செய்யவேண்டும் அல்லது வழக்குத் தாக்கல் செய்யவேண்டும் என்று கேட்டே போராட்டம் நடத்துகின்றனர்.

தற்போதைய சமாதான முயற்சிகளுக்கு வலுச்சேர்க்க - சமாதானப் பேச்சுக்கான நல்லெண்ணப் புறச் சூழ்நிலையைத் தோற்றுவிக்க - தம் வசம் இருந்த போர்க்கைதிகள் பத்துப் பேரை புலிகள் அண்மையில்தான் விடுவித்திருந்தனர்.

புலிகளின் இந்த நல்லெண்ண செயற்பாட்டுக்குப் பதில் நடவடிக்கையாக அரசும் சிறைகளில் வாடும் கைதிகளில் சிலரையாவது விடுவிக்கும் என்ற எதிர்பார்ப்பு நிலவியது. சுதந்திரதினத்தை ஒட்டியாவது இந்த 'நல்ல காரியத்தை' அரசு செய்யும் என்றும் பலர் நம்பினர். ஆனால் அரசிடம் இருந்து இது விடயத்தில் எந்த சமிக்ஞைகளும் கடைசி நேரம்வரை வராமலே போயின. 2,500 சிங்களக் கைதிகளுக்குப் பொது மன்னிப்பு அளித்த ஜனாதிபதி தமிழ்க் கைதிகள் விடயத்தில் மாற்றாந்தாய் மனப்பான்மையையே வெளிப்படுத்தியிருக்கிறார். அவரது நிறைவேற்று அதிகாரங்கள் இந்த நாட்டின் தமிழ் மக்களின் நலன்களுக்கு ஒரு போதும் உதவப்போவதில்லை என்பது இதன் அர்த்தம்.

அந்நியர் ஆட்சி நீங்கி அரை நூற்றாண்டு கழிந்துவிட்ட போதிலும், தமிழர்களுக்கு முற்றுமுழுதான அரசியல் சுதந்திரம் கைக்கு வரவில்லை. அவர்கள் இன்னமும் சமத்துவமான பிரஜைகள் என்ற அந்தஸ்தைப் பெறமுடியவில்லை. சட்ட ரீதியாக கிடைக்க வேண்டிய சலுகைகள், உரிமைகளில் கூட அவர்கள் இரண்டாந்தரப் பிரஜைகளாகவே நடத்தப்படுகின்றனர்.

இந்த நிலை அப்படியே மாற்றம் எதுவுமின்றி தொடர்கிறது. ஆயினும் தமிழ் மக்களும் ஏதோ முழுச்சுதந்திரத்தை அனுபவிப்பதாகப் பாசாங்கு காட்டுவதற்காக வடக்கு - கிழக்கு உட்பட நாடுமுழுவதும் சுதந்திர தின கொண்டாட்டங்கள் ஆண்டு தோறும் நடத்தப்படுகின்றன.

இந்த நிலைமை விரைவிலேயே மாறிவிடும் என்ற நம்பிக்கையோடு, மிகச் சாதாரணமான ஒரு நாளாகவே இன்றைய தினத்தை தமிழ் மக்கள் கழித்துக் கொண்டிருக்கின்றனர்.

---

சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில்

## சிறுவர், பெண்களுக்குத் தனியான முறைப்பாட்டுப் பிரிவு ஆரம்பம்

வலி.வடக்கு,பெப்.4

சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் சிறுவர்கள், பெண்களுக்காக தனியான முறைப்பாட்டுப்பிரிவு ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

முறைப்பாடுகளை தமிழ் தெரிந்த பெண் பொலீஸ் உத்தியோகத்தர்கள் பதிவுசெய்வதற்கு வேண்டிய ஏற்பாடுகளையும் பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி பாலித்த பெர்னாண்டோ மேற்கொண்டுள்ளார்.

அரசின் நூறுநாள் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் இந்நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சுன்னாகம் பொலீஸ் நிலையப் பகுதிக்குள் சட்டவிரோதமாக இயங்கி வரும் கசிப்பு உற்பத்தி, விற்பனை நிலையங்களைப் பிடித்து அவற்றைத் தடைசெய்வது, சட்டவிரோதமான மதுபானச் சாலைகளை மூட நடவடிக்கை எடுத்தல் போன்றவையும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (க-86)

## திருமறைக் கலாமன்ற கண்காட்சிகள்

யாழ்ப்பாணம்,பெப்.4

யாழ்.திருமறைக் கலாமன்றத்தின் ஏற்பாட்டில் இந்த மாத இறுதியில் ஓவியக் கண்காட்சியும், நாடக அரங்கியற் கண்காட்சியும் நடைபெறவுள்ளன.

கடந்த 7 வருடங்களின் பின்னர் திருமறைக் கலாமன்றத்தினரால் நடத்தப்படவுள்ள இந்தக் கண்காட்சிக்கான முன் ஆயத்தப்பணிகள் தற்போது நடைபெற்றுவருகின்றன.

எதிர்வரும் 25ஆம், 26ஆம், 27ஆம் திகதிகளில் பல்வேறு ஓவிய விற்பன்னர்களின் சிறந்த ஓவியங்கள் கண்காட்சிக்காக வைக்கப்படவுள்ளன.

எதிர்வரும் மார்ச்மாதம் முதலாம், 2ஆம், 3ஆம் திகதிகளில் நடைபெறவுள்ள நாடக அரங்கியற் கண்காட்சியிலும், குடாநாட்டு நாடகக் கலை தொடர்பான விளக்கங்கள் இடம் பெறவுள்ளன. (க-6)

## நாட்டு நடப்பு

### தென்மராட்சி அன்றும் இன்றும்

அன்று - iv

தேனொடு பால் கலந்ததென்ன
தெவிட்டாத இசை முழங்க
கான மாமழை பொழிய
கன்னியர் உவகை பூக்க
வானவர் புகழ்ந்து போற்ற
வனிதையர் அறத்தைக் காக்க
தானமும் தவமும் ஓங்க
தமிழவள் உளம் மகிழ
மானத்தைக் காக்கும் வீர
மறவர்கள் முரசு ஒலிக்க
தொன்மைசேர் தமிழர் பண்பை
தொலைக்காத தென்மராட்சி
வண்ணமார் தமிழ் தாயாளின்
வதனமாய்த் திகழ்ந்த தம்மா!

*- விகடகவி.*

## சுகாதாரத் தொழிலாளர் பிரச்சினைகளுக்கு தீர்வு கிடைக்காவிடில் மீண்டும் வேலைநிறுத்தம்

### சங்கம் எச்சரிக்கை

யாழ்ப்பாணம்,பெப்.4

நான்கு வருடங்களில் நான்கு மேயர்களைக் கண்ட யாழ்.மாநகர சபை - சுகாதாரத் தொழிலாளர்களின் நலன் குறித்து சிறிதேனும் அக்கறை கொண்டதாகத் தெரியவில்லை. எமது பிரச்சினைகளுக்கு விரைவில் தீர்வு காணப்படாவிடில் நாம் மீண்டும் வேலை நிறுத்தப் போராட்டத்தில் குதிப்பதைத் தவிர வேறுவழியில்லை.

- இவ்வாறு ஐக்கிய இலங்கை ஸ்தல ஸ்தாபன தொழிலாளர் சங்கத்தின் யாழ்.கிளை, யாழ்ப்பாணம் மேயருக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் எச்சரிக்கை விடுத்துள்ளது.

சங்கத்தின் சார்பில் கிளைச் செயலாளர் ஜே.ரஜனிகாந்த் அனுப்பி வைத்துள்ள அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

கடந்த வருடம் ஜூன் மாதம் எமது சங்கம் சுகாதாரத் தொழிலாளர்களின் பிரச்சினைகள் தொடர்பாக ஏழு கோரிக்கைகளை முன்வைத்து வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டது. அவற்றில் சில கோரிக்கைகள் உடனடியாக நிறைவேற்றப்படும் என அப்போது உறுதியளிக்கப்பட்டது. எனினும், இன்றுவரை அவை முழுமையாக நிறைவேற்றப்படவில்லை.

அதேசமயம், எமது சேவையை கொச்சைப்படுத்தும் கருத்துக்களை சில உயர் அதிகாரிகள் கூறிவருவது எமது தொழிலாளர்கள் மத்தியில் பெரும் விசனத்தை தோற்றுவித்துள்ளது.

சுகாதாரத் தொழிலாளர்களுடைய பிரச்சினைகளுக்கு உடனடியாகத் தீர்வு காணப்படவேண்டும். தவறும் பட்சத்தில் நமது சங்கம் அதிகார துஷ்பிரயோகமற்ற - ஆளுமையான நடவடிக்கைகளில் ஈடுபடுவது தவிர்க்க முடியாததொன்றாகிவிடும் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-9)

## திருமறைக் கலாமன்ற பெண்கள் அமைப்பு கூட்டம்

யாழ்.திருமறைக் கலாமன்றத்தில் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள பெண்கள் அமைப்பின் அங்கத்தவர்களுக்கான முதலாவது கூட்டம் எதிர்வரும் வியாழக்கிழமை மாலை 5மணிக்கு மன்ற அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் பெண்கள் அமைப்பின் அனைத்து அங்கத்தவர்களையும் தவறாது சமுகமளிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (க-6)

## மீசாலையில் மற்றொரு ப.நோ.கூ. கிளைக் கடை!

தென்மராட்சி,பெப்.4

மக்கள் மீளக்குடியமர்ந்துள்ள மீசாலைப் பகுதியில் மேலும் ஒரு கிளைக் கடையை சாவகச்சேரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினர் ஆரம்பித்துள்ளனர்.

மீசாலை வெள்ளைமாவடிப் பிள்ளையார் கோயிலுக்கு அருகில் உள்ள கட்டடத்தில் கடந்த முதலாம் திகதி முதல் இந்தக் கிளைக் கடை இயங்கத் தொடங்கியுள்ளது.

ஏறகனவே மீசாலை புத்தூர் சந்தியிலும் ப.நோ.கூ.ச.கிளை ஆரம்பிக்கப்பட்டு இயங்கிவருவது குறிப்பிடத்தக்கது. (க-117)

## நாய்களை வீதிகளில் நடமாட விடாதீர்கள்!

### 'தகடு' வழங்குவது அதற்காக அல்ல!!

யாழ்ப்பாணம்,பெப்.4

'நாய் உரிமம்' என மாநகரசபையினால் தகடுகள் வழங்கப்படுவது வளர்ப்பு நாய்களைத் தெருவில் நடமாடவும், மலசலம் கழிக்கவும் அனுமதிப்பதற்காக அல்ல. எக்காரணம் கொண்டும் நாய்களைப் பொது இடங்களிலோ, வீதிகளிலோ நடமாடித் திரியவிடாதீர்கள்!

- இவ்வாறு யாழ்.மாநகர முதல்வர் செ.கந்தையன் யாழ்.மாநகர மக்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

நாய் வளர்க்கும் இடம் அமைந்துள்ள உள்ளூராட்சி மன்றத்தில், நாய் தொடர்பான விவரங்களை எழுத்து மூலம் பதிவுசெய்து நாய்களை வளர்க்கவேண்டும் என்பது சட்டமாகும். 'நாய் உரிமம்' என மாநகராட்சி மன்றத்தினால் வழங்கப்படும் தகடுகளை நாயின் கழுத்தில் கட்டிவிடடால அது, தெருவில் நாய்கள் நடமாடவும மலசலம் கழிக்கவும் மாநகரசபை வழங்கிய அனுமதி எனப் பலர் தவறாகப் புரிந்துகொள்கிறார்கள். நாய் பதிவு செய்யப்பட்டதற்கமைய வீடுகளில் வளர்க்கப்படுகின்றதா என்பதை சுகாதாரப் பரிசோதகர்கள் வீடுகளில் வந்து பரிசோதிக்கும்போது அது முறைப்படி பதிவுசெய்த நாய் என்பதை அடையாளம் காண்பதற்காகவே இத்தகடு வழங்கப்படுகின்றது - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-9)

## இனப்பிரச்சினை தீர்வு முயற்சி குறித்து ஐரோப்பிய ஒன்றியம் கூறும் ஆலோசனை

கொழும்பு,பெப்.4

தமிழ் மக்களின் நெருக்கடியான பிரச்சினைகளுக்கு முதலில் தீர்வு காணப்படுவதன் மூலமே அரசியல் தீர்வை நோக்கி முன்னேறமுடியும்.

- இவ்வாறு இலங்கை அரசுக்கு ஐரோப்பிய ஒன்றியம் ஆலோசனை வழங்கியுள்ளது.

இதுதொடர்பாகக் கருத்துத் தெரிவித்த ஐரோப்பிய ஒன்றியத்தின் சுற்றாடல் பாதுகாப்பு ஆணையாளர் மேலும் கூறியதாவது:-

நாட்டில் அமைதியையும், நல்ல எதிர்காலத்தையும் கட்டியெழுப்ப நம்பிக்கையும், எதிர்பார்ப்பும் காணப்படுவதால் உலகின் கவனம் தற்போது கொழும்பு நோக்கித் திரும்பியுள்ளது.

சமாதான முயற்சிகள் வெற்றியடைய வேண்டும் என்று வாழ்த்துத் தெரிவித்த அவர், விடுதலைப் புலிகள அமைப்பு உருவாக முன்னரே இடம் பெற்ற இனமோதல்களால் உணடான காயங்களை அகற்றுவது கடினம் என்றும் -

இது நீண்டகாலம் எடுக்கக்கூடிய முயற்சியாக அமையலாம் என்றும் தெரிவித்தார்.

வடக்கு - கிழக்கு யுத்தம் நாட்டின பொருளாதாரத்தை மட்டுமன்றி ஒவ்வொரு தனிமனிதனையும் பாதிக்கிறது. இதில் ஆயுதவியாபாரி மட்டும் விதிவிலக்காகக் காணப்படுகிறான் என்றும் அவர் தெரிவித்தார்.(க-6-9)

### நாளை

தை 23
செவ்வாய்க்கிழமை
(05-02-2002)
திதி : அட்டமி
நண்பகல் 12.17 வரை.
நட்சத்திரம் : விசாகம்
முன்னிரவு 8.53 வரை.
சுபநேரம் : 11.05 - 12.35
ராகுகாலம் : 3.35 - 5.05
'(பழைய நேரப்படி)

### உதயவாக்கு

ஒரே சமயத்தில் இரண்டு முயல்களை விரட்டினால் இறுதியில் ஒரு முயலைக்கூடப் பிடிக்கமுடியாது போய்விடும்.

யாழ். சிறைச்சாலைக்கு

## கைதிகளைப் பார்வையிட வருபவர்கள் வீதியில் கால்கடுக்க நிற்கும் அவலம்!

யாழ்.சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளைப் பார்வையிட வரும் உறவினர்கள் சிறைச்சாலைக்கு வெளியில் வீதியோரமாக கால்கடுக்க காத்துநிற்கும் அவல நிலை கடந்த ஒரு வருடத்துக்கு மேலாக நீடிக்கிறது.

சிறைச்சாலையின் உள்ளே பார்வையாளர்களை அனுமதிப்பது கைதிகளின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் என்று கூறி சிறைச்சாலை நிர்வாகம் பார்வையாளர்களை வெளியில் நிறுத்திவைத்து குறிப்பட்ட எண்ணிக்கையினரையே கட்டம் கட்டமாகச் சோதனையிட்டு உள்ளே அனுமதிக்கிறது.

இதனால் ஏனையவர்கள் வீதியோரத்தில் காத்துநிற்கின்றனர். கைக்குழந்தைகளுடன் வரும் தாய்மாரும் குழந்தைகளைத் தூக்கிவைத்துக் கொண்டு நீண்டநேரம் நிற்பதையும் அவதானிக்கமுடிந்தது.

சிறைச்சாலைக்கு வெளியில் பொதுமக்கள் ஒதுங்கிநிற்கவோ, காலாற இருக்கவோ வசதிகள் ஏதும் இல்லை. இதனால் பார்வையாளர்கள் உச்சி வெயிலிலும், மழைகாலத்தில் மழையிலும் நனைந்து அவதிப்படுகின்றனர்.


இந்த விடயத்தை பொது அமைப்புகள் கவனத்தில் எடுத்து வீதியோரத்தில் இளைப்பாறும் கொட்டகை ஒன்றையாவது அமைத்துத் தர முன்வரவேண்டும் என்று பொது மக்கள் தரப்பில் கருத்துத் தெரிவிக்கப்பட்டது. (க-6-86)



ஸ்ரீலங்கா வான்படையின் குண்டுத் தாக்குதலால் தகர்ந்து தரை மட்டமான கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனையின் ஒரு பகுதி கட்டடத்தின் தோற்றம். இந்த மருந்துவமனையைப் புனரமைத்து மீள இயங்க வைக்க 15கோடி ரூபா தேவை என மதிப்பிடப்பட்டுள்ளது.

(படம்:தமிழ் நெற்)

# மூன்றாவது ஆண்டு நினைவலைகள்



அமரர்

## கிருஷ்ணபிள்ளை ராஜ்குமார் (B.A.E)

*(உப அதிபர், வவுனியா/வீரபுரம் மணிவாசகர் வித்தியாலயம்)*

மண்ணுறவு 31-03-1969 — *திதி: 04-02-2002* — விண்ணுறவு 08-02-1999

கடமை சுமந்து பயணித்த செல்வத்தின் கனக்கும் இதய சோகங்களுடன் துயருறும்:

*கரவெட்டி மேற்கு,*
*கரவெட்டி.*
*T.P: 070 - 213076* (97107) - குடும்பத்தினர்.

## உலர்உணவு விநியோகம்

காரைநகர்,பெப்.4

காரைநகர் ப.நோ.கூ. சங்கம் தனது கிளைகள் ஊடாக ஜனவரி மாதத்திற்கான உலர்உணவு நிவாரணத்தைப் பொதுமக்களுக்கு வழங்க ஆரம்பித்துள்ளது. இந்த நிவாரணப் பொருள்களை இம்மாதம் 10ஆம் திகதிக்கு முன்னர் பெற்றுக் கொள்ளுமாறு பொது முகாமையாளர் க. நடராசா அறிவித்துள்ளார்.

(ஐ-73)


## வைத்தியம்

*செங்கண்மாரி, அல்சர்,*
*ஆஸ்துமா, வாதநோய்கள்,*
*வலிப்பு நோய், பீனிசம்,*
*தலையிடி,*
*தலை கால் அவியல்,*
*சருமநோய்கள்,*
*மாதவிடாய்க்குத்து,*
*இரத்தப்போக்கு,*
*வெள்ளைக்கசிவு, கருவழிதல்,*
*மகப்பேறின்மை, குழந்தை*
*வைத்தியம், வீரியக்குறைவு,*
*மூலவியாதிகள்,*
*மூத்திரரோகங்களில்*
*பிரபலமானவர்,*
*சகல வியாதிகளையும்*
*குணப்படுத்துபவர்:*

(97353)

**வேலணை** வைத்திய கலாநிதி
**சி.இராசரத்தினம்**
121, 2ஆம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி எண்: 2459


# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

தோற்றம் 14 - 01 - 1924



மறைவு 06 - 01 - 2002

அமரர்

## வேலுப்பிள்ளை காராளசிங்கம்

*(பத்தமேனி, மீட்டிலாங்கூடல் நடராஜ அம்பலவாண விநாயகர் ஆலய தர்மகர்த்தா)*

அன்புக்கும் பண்புக்கும் இலக்கணமாகத் திகழ்ந்து
அவனியில் வாழ்ந்த அன்புத் தெய்வமே!
அம்பலவாண விநாயகரின் அடியினிற் கலந்து
அருட்பேறடையப் பிரார்த்திக்கின்றோம்.

இன்று (04-02-2002) திங்கட்கிழமை நடைபெறும் அந்தியேட்டி மற்றும் ஆத்மசாந்திப் பிரார்த்தனை, மதிய போசனம் ஆகியவற்றில் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*பத்தமேனி,*
*அச்சுவேலி.* (245) - குடும்பத்தினர்.


எங்கள் வீட்டின் - எங்கள் குடும்பத்தின் - எங்கள் பயணத்துக்கு பஜாஜ் ஒன்றுதான்





பஜாஜ் - எனது நண்பன்



பஜாஜ் - எனது கைஉதவியாளன்

**வீட்டில் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமான பயணங்கள் உண்டு.**

அந்த போக்கு வரத்துக்காக வீணாகும் செலவையும், நேரத்தையும், களைப்பையும் குறைப்பதற்கும், அந்த செலவழியும் பணத்தையும் காலத்தையும் சேமித்து அதை எங்களின் குடும்ப முன்னேற்றத்துக்காக பயன்படுத்த எங்களின் பஜாஜ் வண்டியினால்தான் உதவ முடிந்தது.

பஜாஜ் முச்சக்கர வண்டி அன்றுபோல் இன்றும், இன்றுபோல் நாளையும் எங்களின் முன்னேற்றத்துக்கு கைகொடுத்து உதவ எங்களுடன் தொடர்ந்து இயங்கும் என்பது எங்களின் விசுவாசம்.



பஜாஜ் - எனது மூத்தவன்



பஜாஜ் - எனது காவலன்

விலை ரூ. 187,350/-ல் இருந்து மேல் (GST உட்பட)

**டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி லிமிட்டட்**

த. பெ. 1909, 75, ஹைட்பார்க் கோணர், கொழும்பு 02. தொ. பே: 074-700600, 687167, 687169, பக்ஸ்: 687175

பிரதேச கிளை அலுவலகங்கள்:

■ 1743,கட்டுகஸ்தோட்டைவீதி, கண்டி. தொ. பே: 08-226146, 08-238133-5 ■ 27 E, வியாபார ஸ்தானம், தெகியத்தகண்டிய. தொ. பே: 027 50037 ■ 382, அனகாரிக்க தர்மபால மாவத்தை, தொ. பே: 041-27488, 041-28488, 041-28999
■ நீகல் மாவத்தை, அம்பாறை. தொ. பே: 063-22997, 063-23662 ■ 96, மைத்திரிபால சேனாநாயக்க மாவத்தை, அநுராதபுரம். தொ. பே. 025-22676 ■ தனசிரி கட்டிடம், இல. 195, பிரதான வீதி, இரத்தினபுரி. தொலைபேசி: 045-22389

இலவசம்!
ஒவ்வொரு திடமான பதிவுக்கும்
பஜாஜ் முச்சக்கர வண்டி
ஒரு சோடி பக்கத் திரைகளுடன் ஒரு
லீட்டர் சர்வோ என்ஜின் எண்ணை தான் ஒன்றும்
இக்கொடுப்பனவு 2002 ஜனவரி 7 முதல் 31 வரை

மேல் விபரங்களுக்கு இக்கூப்பனை நிரப்பி கீள் குறிப்பிட்ட விலாசத்துக்கு தபாலில் அனுப்பி வையுங்கள்.

பெயர்........................................

விலாசம்........................................

சேவை நிலையம்.................... தொலை பேசி....................

பஜாஜ் முச்சக்கர வண்டி பற்றிய மேல் விபரங்களை அனுப்பி வையுங்கள்.

Tradlanka

# ஆப்கான் மீதான அமெரிக்கத் தாக்குதல்கள் மேலும் பல பின்லேடன்களையே உருவாக்கும்

பயங்கரவாதத்துக்கு எதிராக அமெரிக்க அதிபர் புஷ் ஆப்கானிஸ்தானில் தொடக்கிவைத்த போர் முடிவை எட்டுகிறது. 84வீத அமெரிக்கர்களும், மூன்றில் இருபங்கு ஐரோப்பியரும் இப்போரை நியாயப்படுத்துகின்றனர்.

போரைப் போரால் வெல்ல முடியுமா? வன்செயலை வன்செயலால் அழிக்க முடியுமா? இதுவே இன்றைய கேள்வி. ·

வன்செயலை ஒழிப்பதற்காக ஆப்கானிஸ்தானை தவிடுபொடியாக்கும் அமெரிக்காவின் போர் இன்னும் அதிகமான பின்லேடன்களை உருவாக்கவே வழிவகுக்கும்' என்று எண்ணத் தோன்றுகின்றது.

பின்லேடனையும் அவரது இயககத்தையும் அடியோடு ஒழிப்பது இயலாத ஒன்று. ஏனெனில் அவர்கள் மரபு வழியில் இயங்குவதில்லை. தாக்குதல்களுக்குமுன் அவர்கள் வேறுபட்ட நாடுகளில், வேறுபட்ட காலங்களில், பயிற்சி பெற்று மக்களோடுமக்களாக வாழ்கிறார்கள். 46 நாடுகளில் பின்லேடனுக்கு நிதித் தொடர்பு உண்டு. அத்துடன் அவனது போராளிகள் தற்கொலைப் படையாளிகளாகவும் இருக்கிறார்கள்.

இது ஒரு புதுமைப்போர்; ஏனெனில் இந்தப் போருக்கு போர்த்தளம் கிடையாது; வெற்றி தோல்வியை எடைபோட முடியாது.

ஆப்கானிஸ்தானில் இருந்து ரஷ்ய செம்படை இராணுவம் விலகியதும், முல்லா ஒமர் தலைமையிலான தலிபான் போராளிகள் இயக்கம் உருவாகியது. தலிபான் என்பது இஸ்லாமிய மாணவர்கள் அல்லது கவிநயத்தில் உண்மை அறிவைத் தேடுபவர்கள் என்றும் பொருள்படும்.

தலிபான் 1994இல் காபூலைக் கைப்பற்றி அதிபர் நஜிபுல்லாவை தூக்கிலிட்டார்கள். அன்று அரியணை ஏறிய தலிபானின் சர்வாதிகார அரசு ஆப்கானிஸ்தானைப் பூர்வீக வாழ்க்கைக்கு

## இஸ்லாமிய நாடுகளுடன் பேசுவதே ஒரே தீர்வாகும்

இழுத்துச்சென்றது. பிரித்தானியரும், ரஷ்யரும் ஆப்கானிஸ்தானியருக்கு எதிரான போரில் வெற்றிகொள்ளவில்லை. புவியியல்ரீதியில் அது கடினமானது.

1747ஆம் ஆண்டு தொடக்கம் இன்று வரையான ஆப்கானிஸ்தான் வரலாறு போரைத்தவிர வேறெதையும் சந்திக்கவில்லை. வேலைவாய்ப்புக்களற்ற பொருளாதார மந்தம் அந்த நாட்டை ஆட்கொண்டுள்ளது. தொலைக்காட்சி, ஆடல், பாடல் பொழுதுபோக்கு என்பன நினைத்துப் பார்க்கமுடியாதவை.

தலிபான் சட்டத்தை மீறும் ஆணகளும் பெண்களும் மக்களுக்கு முனனால் கொலை செய்யப்படுவதை, தூக்கிலிடப்படுவதை பார்ப்பதுதான் மக்களின் ஒரேயொரு பொழுதுபோககு.

பஞ்சம் நாட்டை கொடுமையான வறுமைக்குத் தள்ளிவிட்டது. மனித வள உதவி நிறுவனங்கள் நாட்டை விட்டு வெளியேறும் நிலையில் தற்பொழுது பட்டினிச்சாவை எதிர்நோக்கும் மக்கள், நாளொன்றிற்கு 20-25 ஆப்கானிஸ்தானியரை ஊனமாக்கும் ரஷ்யர்கள் விட்டுச்சென்ற 10மில்லியன் கண்ணிவெடிகள், இவைதான் இன்றைய ஆப்கானிஸ்தானின் நிதர்சனம்.

இவை எல்லாவற்றுக்கும் தீர்வு காணும் ஒரேவழி பேச்சு. வன்செயலின் சூத்திரதாரரை இனங்கண்டு பேசுவது கடினமாகலாம் ஆனால் பயங்கரவாதத் தாக்குதலை வெளிப்படையாகக் கண்டிக்கும் இஸ்லாமிய நாடுகளுடன் பேசமுடியும். இப்பேச்சினால் பல தடயங்கள் வெளிச்சத்துக்கு வரும். முக்கியமான வினாக்களுக்கு விடைகள் காணலாம்.

மேற்கு நாட்டவரைக் குறிப்பாக ஐக்கிய அமெரிக்கரை ஏன் அரேபியர், இஸ்லாமியர் வெறுக்கின்றனர்? செப்ரெம்பர் 11 இல் 6000 அப்பாவி அமெரிக்கர் நியூயோர்க்கிலும் வாஷிங்ரனிலும் கொலைசெய்யப்பட்டபோது ஏன் மத்திய கிழக்கில் சிலர் குதூகலித்தனர்? மனித குடும்பத்துக்கும் மானிடத்துக்கும் எதிராக மிகக் கொடூரமான கொலையை, தங்கள் உயிரைப் பணயம் வைத்துச் செய்யத் தூண்டியதென்ன? இக்குரோத உணர்விற்கு மூலவேர் என்ன? ஆகிய வினாக்களுக்கான விடைகள் பேச்சுக்கள் மூலம் கிடைக்கலாம். அவை நிலையான நீதியைக் கொணர உதவும் என்பதில் சந்தேகமில்லை.

இன்னுமொரு முக்கிய நடவடிக்கையாக மேற்குலகம் போரைக் கைவிட்டு சர்வதேச வன்செயல் ஒழிப்பிற்கான நிரந்தரத் தீர்விற்கு நகரவேண்டும். அமெரிக்கர்கள் தாமே உருவாக்கிய செல்லப்பிள்ளைகள்தான் இன்றைய பயங்கரத் தாக்குதல்களின் சூத்திரதாரர்கள் என்பதை உணரவேண்டும். வல்லரசுகளுக்கிடையில் போர் நடைபெற்ற காலங்களில் சவூதி அரேபியா, பாகிஸ்தான் சிறகுகளுக்குள் அமெரிக்கா அடைவைத்துப் பொரித்த குஞ்சுகள்தான் தலிபான் மற்றும் ஒஸாமா பின்லேடன் என்பது வரலாற்று உண்மை. சதாம் ஹுசேன் போன்று ஒஸாமா பின்லேடனுக்கும் ரஷ்ய இராணுவத்தை எதிர்ப்பதற்காகப் பெருமளவிலான நிதி, இராணுவத் தளபாட உதவிகளை அமெரிக்கா கொடுத்தது என்பது உலகம் அறிந்த உண்மை. அமெரிக்க உளவு நிறுவனம் பின்லேடனுக்கும், முஜாகுதீனுக்கும் பயிற்சி 'வழங்கியுள்ளார்கள்.

அமைப்புசார் வன்செயல், அரசியல் வேர்களைக் கொண்டதென்பர். 1999இல் மட்டும் 120 மில்லியன் டொலர் பெறுமதியான அதியுயர் நுட்ப போர்த்தள பாடங்கள் அமெரிக்காவினால் 91 நாடுகளுக்கு விற்கப்பட்டுள்ளன. சோவியத் குடியரசு உடைந்து வீழ்ச்சி அடைந்ததும் தட்டிக்கேட்க யாருமின்றி அமெரிக்கா தன்னிச்சையாகச் செயற்பட ஆரம்பித்தது. உலக வாணிப நெறிகளை அமெரிக்கா தனது நலனுக்காக மீள எழுதியது. தனது அதிகார இருப்பிற்காக நிதியினை அள்ளிவீசியது. தனக்கு சாதகமற்ற உடன்படிக்கைகளை உடைத்தும், ஐக்கிய நாடு ஒன்றியத்திற்குக் கொடுக்க வேண்டியதை கொடுக்காமலும் வளர்முக நாடுகளிற்கான உதவிகளைக் குறைத்தும் கொண்டது.

உலகில் உள்ள அனைத்து நாடுகளுள் தலையிட்டுத் தனது பராக்கிரமத்தை வெளிப்படுத்துகிறது. ஐக்கிய நாடுகளின் ஒப்புதலின்றி சூடான், ஈராக், யூக்கோஸ்லாவியா நாடுகளைத் தாக்கியது. அத்துடன் இஸ்ரேலின் அநீதியான இராணுவ நடவடிக்கைகளை மறைமுகமாக ஆதரித்தது.

"இத்தாக்குதல் அமெரிக்காவை மட்டுமல்ல ஜனநாயகத்தை நேசிக்கும் அனைத்துலக மக்களுக்குமான ஒரு தாக்குதல்" என்ற புஷ்ஷின் கருத்தை உலக வரலாற்றைத் தெரிந்தவர்கள் எவ்விதம் ஏற்றுக் கொள்ளமுடியும்?

சிலி நாட்டு சர்வாதிகாரியான பினோசேக்கு அமெரிக்க உதவி வழங்கப்பட்டதும், அங்கு ஜனநாயக ரீதியாக உருவாக்கப்பட்ட அரசை சி.ஐ.ஏ. மூலமாக தூக்கி எறிந்ததும் எல்சல்வடோர், கொண்டுராஸ், நிக்கரகுவா போன்ற பல லத்தீன் அமெரிக்க நாடுகளில் ஜனநாயக மக்கள் இயக்கங்களைத் தனது கைப்பொம்மைகளை வைதது நிர்மூலமாக்கியது அமெரிக்காதான் என்பதைத் தெரிந்தவர்கள் புஷ்ஷின் கூற்றை எப்படி ஏற்கமுடியும்? அந்த நாடுகளைத் தற்பொழுதும் ஐக்கிய நாட்டின் மனித உரிமை ஆணையத்தின் கருத்துக்களுக்கு மதிப்புக் கொடுக்காமல் தான்தோன்றித்தனமாக வேறு நாடுகளில் நடக்கும் ஆயுதப்போராட்டங்களில் அமெரிக்கா தன்னை ஈடுபடுத்துவது வருந்தத்தக்கது.

**வண.பிதா அ.பி.ஜெயசேகரம்**

மேற்கூறப்பட்ட காரணிகள் அனைத்தும் எவ்விதத்திலும் அமெரிக்காவில் இடம்பெற்ற இக்கொடூரமான தாக்குதலை நியாயப்படுத்துவதற்காகச் சொல்லப்படுபவையல்ல. மனித உயிரின் தூய்மை, மாண்பை உணராமல் அதை அழிக்கிறவர்கள் அடையாளம் காணப்பட்டுத் தண்டிக்கப்பட வேண்டியவர்கள்தான். இக்கொலை நிகழ்வு மிகக்கொடூரமானது என்பதில் இரண்டாவது கருத்திற்கு இடமில்லை. ஆனால் உலகளாவிய வன்செயலை நிரந்தரமாகக் கட்டுப்படுத்துவதற்கு என்ன முறைகள் கையாளப்படுகின்றன. அவைகள் எப்படிக் கையாளப்படுகின்றன என்பதுதான் எமது கேள்வி.

பழிக்குப்பழி ஒருபொழுதும் சமாதானத்தை உருவாக்கும் கருவியாகாது. சந்திக்க முடியாத இரு துருவங்களாகப் பிரிந்தவர் மத்தியில் உருவாகும் பழிக்குப்பழி வேட்கை மிக ஆபத்தானது.

பலம்பெற்ற வல்லரசான அமெரிக்கா பெருந்தன்மையோடு உலக அமைதியை கொணர்வதற்கும் பாதுகாப்பான எதிர்காலத்தை உருவாக்குவதற்கும் பாடுபடுவது அவசியமாகின்றது. வெறுப்பு மனிதகுலத்தை அளிக்கும் நஞ்சு. ஆப்கான் போர் மேற்குலகத்திற்கும் இஸ்லாமிய உலகத்திற்கும் இடையிலான நிலையான குரோதங்கள், வெறுப்புக்களைத் தொடர்ந்தும் தக்கவைக்கும்.

நாம் நீதியைத் தேடவேண்டும். அது உரையாடல் ஊடாகப் பெறவேண்டியதொன்று. கூட்டுவெறுப்பின் வெளிப்பாடாகிய வன்செயலுக்குத் தூபமிடும் வேர்களை நாம் தேடவேண்டும்.

அமெரிக்காவின் வெளியுறவுச் சித்தாந்தங்கள், பூகோளமயமாக்கல் என்பவைகள் இஸ்லாமிய நாடுகளையும், வறிய நாடுகளையும் பெரிதும் பாதிக்கின்றன. அமெரிக்காவின் வெளியுறவுக்கொள்கையில் எப்பொழுதுமே குருதி படிந்துள்ளது என்பது கனேடியப் பேராசிரியர் ஒருவரின் விமர்சனம். இவைகள் திறந்தமனத்தோடு பேசப்படவேண்டியவை என்பதை அமெரிக்கா உணரவேண்டும். ☆

# மரநிழல்களில் இருந்து கற்கும் தென்மராட்சி மாணவர் அவலம்

பாரிய இடப்பெயர்வைச் சந்தித்த தென்மராட்சியில் தற்போது மீள்குடியமர்வுகள் இடம்பெற்று வருகின்றன. அத்துடன் தென்மராட்சிக் கல்வி வலயத்தைச் சேர்ந்த பாடசாலைகள் பலவும் தத்தமது சொந்த இடங்களில் இயங்கத் தொடங்கியுள்ளன.

ஆனாலும் மீளத் தொடங்கப்பட்டுள்ள பாடசாலைகள் அடிப்படைத் தேவைகள் இல்லாத நிலையிலேயே இயங்கிவருகின்றன. சில பாடசாலைகளில் மாணவர் வரவு 90 சதவீதமாக உள்ளபோதும், தளபாடப் பற்றாக்குறையால் மாணவர்கள் மர

## தளபாடங்கள் மற்றும் வசதிகள் இல்லாமையால் பெரும் அவதி

நிழலில் அமர்ந்தே கல்வி கற்பதைக் காணமுடிகிறது.

தென்மராட்சியில் கடந்த மாதம் 25 ஆம் திகதி சில பாடசாலைகளின் மாணவர் வரவு பின்வருமாறு:-

- கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயம் - 606 (82%)
- மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயம் - 601 (86%)
- வரணி மகா வித்தியாலயம் - 575 (79%)
- கச்சாய் அ.த.க.பாடசாலை - 335 (78%)
- அல்லாரை அ.த.க.பாடசாலை - 165 (94%)
- மிருசுவில் அ.த.க. பாடசாலை 251 (100%)
- குடமியன் அ.மி.த.க. பாடசாலை - 177 (89%) விடத்தற்பளை
- கமலாசினி வித்தியாலயம் 194 - (74%)
- கெற்பேலி அ.த.க. பாடசாலை - 55 (65%)
- மீசாலை விக்னேஸ்வரா வித்தியாலயம் - 65 (31%)
- மட்டுவில் அ.த.க.பாடசாலை - 66 (41%)
- மீசாலை கமலாம்பிகை வித்தியாலயம் - 28 (25%)
- போக்கட்டி அ.த.க.பாடசாலை - 92 (89%)

இந்தப் பாடசாலைகளில் தளபாடப் பற்றாக்குறையே பிரதான பிரச்சினையாக உள்ளது. உதாரணமாக மீசாலை விக்னேஸ்வரா வித்தியாலயத்தில் மாணவர்கள் பயன்படுத்தும் மேசை ஒன்றையே அதிபர் தனது கடமைகளுக்குப் பயன்படுத்தி வருவதைக் காணக்கூடியதாக இருநதது.

மீள இயங்கும் பாடசாலைகள் அனைத்திலும் கிணறுகள் உள்ளன. ஆனால் அவை துப்பரவு செய்யப்படாததால் மாணவர்கள் வேறு வீடுகளில் உள்ள கிணறுகளில் இருநதே குடிதண்ணீரை எடுத்து வந்து பயன்படுத்துகின்றனர். பாடசாலைகளில் முன்னர் அமைக்கப்பட்டிருந்த மலசல கூடங்கள் சேதமடைந்துள்ளன. இதனால் மாணவிகளும், ஆசிரியைகளும் பெரும் சங்கடங்களை எதிர்நோக்குகின்றனர்.

விடத்தற்பளை கமலாசினி வித்தியாலயம் அமைந்துள்ள பகுதிக்கு வெளியில் இருந்து அங்கு செல்பவர்கள் பாதுகாப்புக் கெடுபிடிகளை எதிர்நோக்க வேண்டியுள்ளதாகக் கூறப்படுகிறது. தூர இடங்களில் இருந்துவரும் ஆசிரியர்கள் இதனால் சிரமங்களுக்கு இலக்காவதாகத் தெரிவிக்கப்பட்டது. இதே பிரச்சினையை

### ஒரு நேரடி ரிப்போர்ட்

வேறு சில பாடசாலைகளும் எதிர்கொள்கின்றன.

விடத்தற் பளை கமலாசினி வித்தியாலயத்தின் ஸ்தாபகக் கட்டடங்களின் கூரை ஓடுகள், நிலை மரங்கள், கவர்க்குற்கள் ஆகியவை அகற்றப்பட்டுள்ளன. மிருசுவில் அ.த.க. பாடசாலையில் மாணவர்களின் தொகைக்கேற்ப ஆசிரியர்கள் தமது கடமையைப் பொறுப்பேற்காததால் வகுப்புகள் சீராக நடைபெறமுடியாமலிருப்பதாகக் கூறப்படுகிறது.

சாவகச்சேரி பிரதான படைமுகாம் அருகே உள்ள மீசாலை கமலாம்பிகை வித்தியாலயத்தில் ஆசிரியை ஒருவர் மட்டுமே பணிக்கு வருவதாகப் பெற்றோர் தெரிவித்தனர்.

சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் ஆரம்பப் பிரிவுக்கு செல்ல முடியாத அளவுக்கு பாதையைப் பற்றைகள் மூடியுள்ளன. அத்துடன் அப்பகுதியில் கண்ணிவெடிகளும் அதிகளவில் புதைக்கப்பட்டுள்ளதாக நம்பப்படுகிறது. சில பகுதிகளில் கண்ணிவெடி அகற்றும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளன.

சாவகச்சேரி நகரின் ஏனைய பாடசாலைகளும் உடனடித் திருத்த வேலைகள் மேற்கொள்ளப்பட வேண்டிய நிலையிலேயே உள்ளன.

டிறிபேக் கல்லூரி, மகளிர் கல்லூரி, நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை வித்தியாலயம், கல்வயல் ஸ்ரீ சண்முகானந்தா வித்தியாலயம், சக்தியம்மன் தமிழ் வித்தியாலயம், றோமன கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை ஆகியவை உடனடித் திருதத வேலைகள் மேற்கொள்ள வேண்டிய அவசியத்தில் உள்ளன.

கைதடிப் பிரதேசத்தில் கடந்த வருடம் மீள இயங்கிய முத்துக்குமாரசாமி வித்தியாலயத்தில் 458 மாணவரும், விக்னேஸ்வரா வித்தியாலயத்தில் 282 மாணவர்களும், குருசாமி வித்தியாலயத்தில் 120 மாணவர்களும் கல்வி கற்கின்றனர்.

இப்பிரதேசத்தில் உள்ள ஏனைய பாடசாலைகளான கலைவாணி வித்தியாலயம், சேது காவலர் வித்தியாலயம், எருதிடல் அ.த.க.பாடசாலை ஆகியவை இயங்காததால் அப்பாடசாலைகளின் மாணவர்கள் வேறு பாடசாலைகளில் தற்காலிகமாக இணைக்கப்பட்டுள்ளனர்.

தென்மராட்சிப் பகுதி பாடசாலைகளை மீண்டும் சொந்த இடங்களில் சீராக இயங்கவைக்க முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இருந்தபோதிலும் கண்ணிவெடி அபாயமும்,

*– தென்மராட்சி செய்தியாளர் –*
**ஐ.கிருஷ்ணன்**

புனரமைப்புக்கான நிதி இல்லாமையும், இடம்பெயர்ந்த மக்களில் பெரும்பாலானவர்கள் மீண்டும் தமது இடங்களில் சென்று வாழ முடியாத அளவுக்கு அவர்களது வாழ்விடங்கள் சேதமடைந்திருப்பதும் தென்மராட்சிப் பாடசாலைகள் மீள இயங்குவதற்கு முக்கிய தடைக்கற்களாக இருக்கின்றன. ☆



யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞான பீட மாணவர் ஒன்றியத்தின் சமூக அறிவியல், கலை இலக்கிய இதழான 'சக்கரம்' சஞ்சிகை வெளியீட்டு விழா கடந்த செவ்வாயன்று பல்கலைக்கழக பௌதிகவியல் மண்டபத்தில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படம் இது.

'சக்கரம்' சஞ்சிகையினை யாழ்.பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பொ.பாலசுந்தரம்பிள்ளை வெளியிட்டுவைப்பதனையும் பிரதியினை உயர் பட்டப் படிப்புகள் பீடாதிபதி பேராசிரியர் அ.சண்முகதாஸ் பெற்றுக்கொள்வதனையும் - விஞ்ஞான பீட மாணவர் ஒன்றியத்தின் தலைவர் அருகில் நிற்பதனையும் காணலாம். (ம-180)

# 31 ஆவது நாள் நினைவஞ்சலி

பிறப்பு 20 - 03 - 1948



இறப்பு 05 - 01 - 2002

அமரர்

## வேலன் சிவனடியான்

அன்போடு எம்மை ஆதரித்து வளர்த்தீர்
பண்போடு நாம் வாழ வழி அமைத்துத் தந்தீர்
இன்றோடு முப்பத்தொரு நாள் ஆனதே அப்பா!
ஆத்மா சாந்தி பெறப் பிரார்த்திக்கின்றோம்.

*பிரிவால் துயரில் மூழ்கியுள்ள:*
மனைவி, மகன், மகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

*மானிப்பாய் வடக்கு, மானிப்பாய்.* (268)

# 2ஆம் ஆண்டு நினைவலைகள்

தோற்றம் 1938 ◊ 03 ◊ 06



மறைவு 2000 ◊ 01 ◊ 28

## அமரர் காசிப்பிள்ளை சிதம்பரப்பிள்ளை

திதி: 04.02.2002

*அன்பின் ஒளி விளக்கே! பாசத்தின் உறைவிடமே! ஆண்டுகள் இரண்டு புரண்டாலும் ஆறாதய்யா உங்கள் நினைவு.*

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

*பிரதான வீதி, நீர்வேலி வடக்கு, நீர்வேலி.* (251)

பிரிவால் துயருறும்: குடும்பத்தினர்.

# நெஞ்சம் நெகிழும் முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

*அன்னை மடியில் 12 - 08 - 1949*



*ஆண்டவன் அடியில் 15 - 02 - 2001*

அமரர்

## பொன்னம்பலம் நாகராசா

***(முன்னாள் பொறியியலாளர், மகாவலி அபிவிருத்திச்சபை)***

திதி: அட்டமி 04-02-2002

ஆண்டொன்று சென்றதோ - என வாழ்வின்
ஆதாரசுருதியே உமைப்பிரிந்து
நித்தம் நித்தம் உங்கள் நினைவுகளால்
சித்தங்கலங்கித் தவிக்கின்றேன்
சிறப்பிழந்தேன் இல்லத்தில் நீர் சென்ற நாள் முதலாய்
சிறகொடிந்த பறவையாய் சிலுவை சுமக்கின்றேன்
ஆறமுடியவில்லை ஆற்ற யாருமில்லை - உமைப்போல்
ஊனமில்லா அன்புதர உலகில் எவருமில்லை
நெடுநாளாய் நான் புரிந்த தவத்தாலே நீர் கிடைத்தீர்
நேரில் வந்த தெய்வமென திறைவோடு வாழ்ந்திருந்தேன்
நேசமதில் குளிர் நிலவாய் நெஞ்சமெல்லாம் நிறைந்திருந்தீர்
வாழ்ந்திருந்த காலமெல்லாம் வசந்தம் தவழவிட்டு
வாழ்ந்தது போதுமென்றோ வானுலகு சென்றீர்கள்?
ஓராண்டென்ன ஓராயிரம் ஆண்டு சென்றிடினும்
ஆறுமா என் சோகம் தீருமா என் கவலை?
இனிவரும் ஜென்மங்களில் என் துணையாய் வருவீரா
என் ஏக்கம் தவிர்ப்பீரா?
அடுத்த பிறவியிலும் துணையாக வரவென்றே
என் பயணம் முடியுமுன்னே உம் பயணம் முடித்துவிட்டீர்
பரமன் அழைத்தானோ பற்றறுத்து வாவென்று
அரன் அடியில் அமைதிபெற அஞ்சலித்தேன் அனுதினமும்.

*"திருப்பதி"*
*சிவன் கோயிலடி, சாவகச்சேரி.* (149)

பிரிவால் துடிக்கும்: அன்பு மனைவி.

## இசையரங்கம்

யாழ்ப்பாணம்,பெப்.4

அளவெட்டி அளிஞ்சிலடி விநாயகர் ஆலய முன்றிலில் இன்று திங்கட்கிழமை மாலை 4 மணிக்கு யாழ். பல்கலைக்கழக உதவி விரிவுரையாளர் ஸ்ரீ.தர்சனனின் இசையரங்கம் நடைபெறவுள்ளது.

இந்த தெய்வீக இசையரங்கத்தில் இசை ஆர்வலர்கள் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (க-6-ரி)

## விளையாட்டு உத்தியோகத்தர்கள் திருமலை விஜயம்

வலி.வடக்கு,பெப்.4

யாழ்மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர்கள் விளையாட்டு சம்பந்தமான பயிற்சிக்காக நாளை செவ்வாய்க்கிழமை திருமலை செல்லவுள்ளனர்.

வடக்கு - கிழக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இப்பயிற்சி வகுப்புகள் திருமலையில் ஒரு வார காலத்திற்கு நடைபெற ஏற்பாடாகியுள்ளது. (க-86)

## பாதை திறப்பை முன்னிட்டு சைக்கிள் ஓட்டம்

கொழும்பு,பெப்.4

கடந்த எட்டுவருடங்களாக பொதுப் போக்குவரத்துக்குத் தடை செய்யப்பட்டிருந்த வவுனியா - கெப்பட்டிகொல்லாவ நெடுஞ்சாலை இன்று போக்குவரத்துக்குத் திறந்து வைக்கப்படவுள்ளதாக வடமத்திய பகுதிப் பிரதிப் பொலிஸ்மா அதிபர் காரியாலயம் தெரிவித்துள்ளது.

இந்தப் பாதை திறப்பை முன்னிட்டு 8கிலோ மீற்றர்கள் தூர சைக்கிளோட்டப் போட்டி ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அநுராதபுர பிரதான வீதியில் ஆரம்பமாகும் போட்டியில் பங்குபற்றும் சைக்கிளோட்டிகள் மதவாச்சி, கெப்பிட்டிகொல்லாவ ஊடாக வவுனியாவைச் சென்றடைவார்கள் என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ)

## தொழில்நுட்ப நிறுவன இறுதியாண்டுப் பரீட்சை

யாழ்ப்பாணம்,பெப்.4

யாழ்.உயர் தொழில்நுட்ப நிறுவன இறுதியாண்டு மாணவர்களுக்கான பரீட்சைகள் எதிர்வரும் 18ஆம், 19ஆம், 20ஆம் திகதிகளில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா (எச்.என்டி.ஏ.) மற்றும் தேசிய ஆங்கில டிப்ளோமா (என்டிஈ.) ஆகிய கற்கை நெறியைத் தொடரும் மாணவர்களுக்கான பரீட்சைகளே நடைபெறவுள்ளன என்று உயர் தொழில்நுட்ப நிறுவன இயக்குநர் ரி.இராஜரட்ணம் தெரிவித்தார். (க-6)

## வாழ்க்கைச் செலவு 14.02ஆக அதிகரிப்பு

கொழும்பு,பெப்.4

கடந்த ஜனவரி மாதத்தில் வாழ்க்கைச் செலவுக் குறியீடு 14.02 புள்ளிகளாக அதிகரித்துள்ளதாக மத்திய வங்கிப் புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

அரிசி, மா, தேங்காய், தேங்காய் எண்ணெய், மீன், வெங்காயம் அனைத்துவகை மரக்கறிகள் போன்ற அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் கடந்த மாதம் அதிகரித்துள்ளன. முன்னர் இல்லாத வகையில் ஒரு கிலோ அரிசியின் விலை 4.5ரூபா வரை உயர்ந்தது என்றும் மத்திய வங்கி அறிவித்துள்ளது. (ஒ)

## நவாலிப் பகுதி துணை இழந்தோருக்கு!

யாழ்ப்பாணம்,பெப்.4

நவாலிப் பகுதியில் ஜே-134, 135, 136 ஆகிய கிராம சேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்த துணை இழந்தோர் மற்றும் விதவைகள் ஆகியோர் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நவாலி வடக்கு சனசமூக நிலையத்தில் தம்மைப் பற்றிய விவரங்களைப் பதிவு செய்து கொள்ளும்படி சனசமூக நிலைய நிர்வாகிகள் கேட்டுள்ளனர்.

துணை இழந்தோர், விதவைகள் நலன்காக்கும் அமைப்பு ஒன்றை ஏற்படுத்தும் முதற்கட்ட நடவடிக்கையாகவே இந்தப் பதிவுகள் மேற்கொள்ளப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-185)


# வளர்மதி கல்வி நிலையம்

மட்டுவில் தெற்கு

**எமது வழமையான தனித்துவம்மிக்க ஆசிரியர் குழுவினருடன் 02.02.2002இல் இருந்து மீண்டும் அனைத்து வகுப்புகளும் ஆரம்பிக்கப்பட்டு, வகுப்புகள் ஒழுங்காக நடைபெறுகின்றன என்பதை எமது மாணவர்களுக்கு அறியத்தருகின்றோம்.**

நிர்வாகம்,
வளர்மதி கல்வி நிலையம்.

(288)


# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 22 - 05 - 1923



மறைவு 14 - 02 - 2001

## அமரர் தம்பிப்பிள்ளை செல்வராசா

(சின்னண்ணை)

திதி:04.02.2002

*நற்றுணையாய்யிருந்து நலமே*
*வாழவைத்து மக்கட்பேறு பெற்று*
*சற்குருவாய் நின்று அவர்கட்கு*
*வழிகாட்டி வளமுடன் கல்வி தந்து*
*உற்ற காலத்தில் உற்ற துணையுடன்*
*வாழவைத்து பேரப்பிள்ளைகள் கண்டு*
*கற்புலத்து மனோன்மணி பாதக்கமலத்தில்*
*தஞ்சமடைந்து ஆண்டொன்று சென்றதைய்யா!*
*ஆற்றாமல் அரற்றுகின்றோம் எங்கள்*
*குலவிளக்கே உள்ளத்து நினைவுடன்!*

*நந்தாவில் லேன், கொக்குவில்* (261)

- குடும்பத்தினர்

# 31ஆம் நாள் நினைவு தினம்

மலர்வு 14 ❖ 01 ❖ 1950



உதிர்வு 05 ❖ 01 ❖ 2002

## அமரர் சவிரியாம்பிள்ளை அன்ரனி

***(கிட்டப்பா சின்னக்கிளி)***

பத்துமாதம் சுமந்து பெற்ற பாவி என்வயிறு
பற்றி எரியுதடா என்மகனே! - உன்னைப்
பெற்று வளர்த்த பாதகி நான் இங்கிருக்க - நீ
பிரிந்து சென்றதேனையா என்னை விட்டு?

தம்பி தம்பி என்று உன் அண்ணன்மார் இருவருமே
தவித்துப்போய் மலைத்துப்போய் ஏங்கி நிற்க - உன்னை
நம்பி நின்ற உன் மனைவி மங்கை நல்லாள் -
நாதியற்றுத் தனியனாகி நலிந்து வாட

'அப்பா! அப்பா' என்று வாய்நிறைய அழைத்த மகள்
ஆற்றொணாத் துயர் கொண்டு அழுது வாட
தங்கைமார் உன்பிரிவால் தாங்கொணாது
தலைதலையென்று அடித்து அழுது புரண்டுமாள

தம்பிமார் சின்னக்கிளி அண்ணா உன்னை
தரணியிலே என்று இனிமேல் காண்போம்? - என்ன
உன்னைத்தான் உயிராய் எண்ணி அன்பு செய்த
உத்தமராம் உன் அத்தார் உருகி நிற்க

அண்ணியுடன் மச்சாள்மாரும் மச்சான்மாரும்
கண்ணீரிலே குளித்துக் கதறி அழ விட்டு விட்டு
எங்கு சென்றாய்? கோமானே குலக்கொழுந்தே
ஏன் சென்றாய் எம்மையெல்லாம் தவிக்கவிட்டு?

சங்கம் வளர்த்த நற்தமிழில் பேசி சபைகளிலே -
சாதனை படைத்தவனே சாகவில்லையடா - நீ
எங்கள் உள்ளங்களிலே வாழுகின்றாய்
என்றென்றும் மனதுக்கு இனியவனே
என் மகனே சின்னக்கிளி.

*நனைந்த விழிகளுடன்:*
தாய், மனைவி, மகள், சகோதர சகோதரிகள், மைத்துனர்மார், மைத்துனிமார், மாமா, மாமி, உறவினர்கள்.

*13,மத்தியமேற்கு வீதி, குருநகர், யாழ்ப்பாணம்.* (253)

# சமாதானம்தான் ஒரேவழி; அது மிகக் கடினமானது!

**சமாதான முயற்சிகளில் உருவாகக்கூடிய பிரச்சினைகள் குறித்து இக்கட்டுரை ஆராய்கிறது. "ராவய" வார இதழில் வெளியான அரசியல் விமர்சனத்தின் தமிழாக்கத்தை இங்கு தருகிறோம்.**

இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணபதற்காக ஐக்கிய தேசிய முன்னணி அரசு விடுதலைப் புலிகள் அமைப்புடன் உடன்பாடொன்றை எட்டவதற்காக மிகவிரைவாகச் செயற்பட்டுக்கொண்டிருக்கிறது. அதேசமயம் நாடு முன்பு ஒருபோதும் இல்லாத விதத்தில் பொருளாதார நெருக்கடியை - வங்குரோத்து நிலையை - அடைந்துள்ளது. நாட்டின் பொருளாதார வளர்ச்சி முற்றிலுமாகப் பாதிப்படைந்துள்ளது.

நாட்டில் அடிப்படைப் பிரச்சினைகள் பல இருப்பினும், அந்தப் பிரச்சினைகள் அனைத்துடனும் தொடர்புடைய இனப்பிரச்சினையானது ஏனைய பிரச்சினைகள் யாவற்றையும் ஒருபுறம் ஒதுக்கிவிட்டது.

விடுதலைப் புலிகளுடன் யுத்தத்தை நடத்திக்கொண்டு ஏனைய பிரச்சினைகளுக்குத் தீர்வினைக் காணலாம் என இருந்த வாய்ப்புகளும் முற்றிலுமாக முடங்கிவிட்டன. இருக்கும் அடிப்படைப் பிரச்சினைகளில் தீர்வினைக் காண்பது கடினமானதும் சிக்கல் நிறைந்ததும் இந்த இனப்பிரச்சினையே ஆகும். ஏனைய பிரச்சினைகள் சிக்கல்கள் குறைந்தனவாகவும், கடினம் அற்றனவாக இருப்பினும் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படாவிடின், அவற்றுக்குத் தீர்வு காணமுடியாத நிலையில் நாடு உள்ளது.

### மாற்றுவழி சமாதானமே

யுத்தத்தை நடத்தவேண்டிய தேவை நாட்டுக்கு இருப்பினும், நாட்டின் வங்குரோத்து அடைந்துள்ள பொருளாதார நிலையில் யுத்தத்தை நடத்த வாய்ப்பில்லை. இந்த நிலைமையிலிருந்து விடுபட வேண்டுமெனில், தேர்ந்தெடுப்பதற்கு உரிய ஒரே மாற்றுவழி சமாதானத்திற்கான வழி மாத்திரமே. இருப்பினும் அதில் வெற்றிபெறுவதும் சுலபம் அல்ல.

**தமிழில் : கஜனி**

சமாதானத்தில் வெற்றிபெறுவதன் மூலம் ஏனைய பிரச்சினைகளுக்கும் தீர்வினைக் காணலாம் என்பதே புதிய அரசின் தந்திரோபாயம் போலத் தெரிகிறது. பொருளாதாரத்தைப் பொறுத்தவரையில் அடைந்துள்ள வங்குரோத்து நிலைவரத்தின்படி மக்கள்மீது மேலும் சுமைகளை ஏற்றுவதைத் தவிரத் தன்காலில் நிற்கும் ஆற்றல் நாட்டுக்கு இல்லை. இருப்பினும், சமாதானத்தை நோக்கிய அரசின் நேர்மையான - கடுமையான - முயற்சிகள் நாட்டுக்கு உலக நாடுகளிலிருந்து நிதியைப் பெற்றுத்தரக்கூடியனவாகும். இருப்பினும் சமாதானத்திற்கான பயணம் மிகவும் கடினமான - சிக்கலான - பயணமாகும். அந்தப் பயணத்தின்போது உருவாகக்கூடிய - சந்திக்கக்கூடிய - ஒரு சிறுதவறுகூட சிலவேளைகளில் நாட்டையே முற்றாக அழித்துவிடக்கூடும். தெரிவு செய்வதற்கு ரணில் விக்கிரமசிங்கவுக்கு வேறு மாற்றுவழிகள் ஏவையுமில்லை. இருப்பது ஒரேயொரு வழி மாத்திரமே. அந்த வழி மிகவும் கடினமானது - சிக்கலானது.

நாடாளுமன்றத்தில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு நாடாளுமன்றத்தின் பெரும்பான்மை இருந்தபோதிலும், நிறைவேற்று அதிகாரங்களைக் கொண்ட ஜனாதிபதிப் பதவி எதிர்க்கட்சியிடமே உள்ளது. சமாதானத்துக்கான மக்களின் ஆணை கிடைக்கப்பெற்றிருப்பினும் அரசுக்கு எதிராக வாக்கைப் பயன்படுத்தியோர் பெரும் எண்ணிக்கையில் நாட்டில் உள்ளனர்.

### பகைமை உணர்வு

பொ.ஐ.முன்னணியின் ஆட்சிக் காலததில் தங்களுக்கு எதிராக இடம்பெற்ற சம்பவங்களை ஐ.தே.கட்சியினர் இலகுவில் மறந்திருக்கமாட்டார்கள். அதேபோல, பகைமை உணர்வுகளை முற்றிலுமாகக் கைவிட்டு புதிய அரசுக்கு ஆதரவை வழங்கும் நிலையில் எதிர்க்கட்சிக்கு வாக்களித்த மக்களுமில்லை. இனரீதியாகப் பிரிவடைந்துள்ள மக்களிடையே பரஸ்பர பகைமை உணர்வே உருவாகியுள்ளது. விரைவாக அதிகரித்து வரும் வாழ்க்கைச் செலவினமும் மக்கள் அரசுமீது அதிருப்திகொள்ள முக்கிய காரணியாகும்.

தீர்வு தொடர்பாக அனைத்துத் தரப்பினரின் உடன்பாட்டைப் பெற வாய்ப்பு இல்லாவிடினும் பெரும்பான்மையினரில் அதிகமானோரின் உடன்பாடு தீர்வினைக்காண மிகவும் தேவையானதாகும். தீர்வினைக் காண்பதற்கு இணங்காத மக்களிடையே அதிகமானோரை எதிர் நடவடிக்கைகளை மேற்கொள்ளவிடாது செயலிழக்கச் செய்வதும் சமாதானத்தை உருவாக்குவதற்கு மிகவும் தேவையான விடயமாகும்.

தீர்வினைக் காண்பதற்கு விடுதலைப் புலிகளின் உடன்பாடும், தமிழ்மக்களின் உடன்பாடும் மட்டும் போதுமானவை அல்ல. சிங்கள மற்றும் முஸ்லிம் மக்களின் உடன்பாடும் தேவையானதொன்றாகும்.

தீர்வினைக் காணும் பயணத்தின் போது மேலும் தவறுகள் ஏற்படாது பார்த்துக்கொள்ளவேண்டும். அதே நேரம் பிரதிவாதி தரப்பிலும் தவறுகள் உருவாகாத விதத்தில் பார்த்துக்கொள்ளவேண்டும். இவற்றைவிட தொடர்புடைய இரு தரப்பாரை விட வெளியார் அல்லது மூன்றாந் தரப்பாரின் குழப்ப நடவடிக்கைகளுக்கு இடமளிக்கக்கூடாது.

### கடினமான பணி

விடுதலைப் புலிகளுக்கு மகிழ்ச்சி தரும் விடயம் படையினருக்கு கவலையளிக்கும் விடயமாக அமையலாம்; படையினருக்கு உற்சாகமளிக்கும் விடயம் விடுதலைப் புலிகளுக்கு கவலைதரும் விடயமாக அமையலாம். தமிழ் மக்களுக்கு மகிழ்ச்சி தரும் விடயம் சிங்கள மற்றும் முஸ்லிம் மக்களுக்கு கவலைதரும் விடயமாக அமையலாம; அதேபோல சிங்கள மறறும் முஸ்லிம் மக்களுக்கு மகிழ்ச்சிதரும் விடயம தமிழ் மக்களுக்கு கவலைதரும் விடயமாக அமையலாம்.

இத்தகைய பரஸ்பர விரோத உணர்வுகளைக் கவனத்தில் எடுத்து அனைத்துத் தரப்பினராலும் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு பொது வரையறையை உருவாக்குவது கடினமாயினும் அதுவே வெற்றி இலக்காகும்.

இந்தக் கடினமான பயணத்தில் பொ.ஐ.முன்னணிக்குள்ள சாதகமான நிலைகள், ஐ.தே.முன்னணிக்கு இல்லை. பொ.ஐ.முன்னணியிடம் நாடாளுமன்ற அதிகாரமும், ஜனாதிபதிப் பதவியும் இருந்தன. ஆனால் ஐ.தே.முன்னணியிடம் நாடாளுமன்ற அதிகாரம் மாத்திரமே உண்டு. பொ.ஐ. முன்னணி ஆட்சியின்போது ஜே.வி.பி., அரசுக்கு எதிராக விமர்சனங்களை மேற்கொண்டபோதிலும் பொ.ஐ. முன்னணியின் ஆட்சியைக் கவிழ்க்கும் விதத்தில் ஜே.வி.பி.செயற்படவில்லை. ஆனால் தற்போது ஜே.வி.பியானது பொ.ஐ.முன்னணியுடன் ஒத்துழைப்புடன் செயற்படும் கட்சியாக விளங்குகிறது.

### பொ.ஐ.முன்னணியின் தந்திரப் போக்கு

அரச அதிகாரங்கள் அனைத்தையும் தனது கைகளில் கொண்டிருந்த நிலையில், குழப்பங்கள் உருவாகுமே என்ற அச்சமின்றி முன்னேறும் ஆற்றல் பொ.ஐ.முன்னணிக்கு இருந்தது. ஆனால் ஐ.தே.முன்னணிக்கு அவ்வாறான சாதகமான நிலைமை இல்லை. பொ.ஐ.முன்னணியின் தலைவி தனது பிரதிவாதியுடன் (ரணிலுடன்) உள்ள பகைமையைக் கைவிட்டு நாட்டின் அமைதி வேண்டி, சமாதானத்தை உருவாக்கி - எதிரணியைச் சக்திபெறச்செய்து ஆட்சியை உறுதிசெய்ய வாய்ப்பு அளிப்பார். அந்த வழியைப் பின்பற்றுவார் என நாம் சிந்திக்க முடியாது.

எதிர்ப்பை உடனடியாக வெளியே காட்டாமல் - அந்தப் பணியை ஜே.வி.பியிடம் கையளித்துவிட்டு, மிகவும் சாதகமான நிலைமை உருவாகும் போது கிளர்ந்தெழுவதே பொ.ஐ.முன்னணியின் திட்டமாக இருக்கலாம்.

## சந்திரிகா கையில் சுக்கான்

### சந்திரிகாவிடம் சுக்கான்

படகுப் போட்டியில் ரணில் விக்கிரமசிங்க போட்டியாளராக இருக்கலாம். ஆனால் படகின் சுக்கான் சந்திரிகாவின் கைகளிலேயே உள்ளது.

சமாதானத்திற்கான பயணத்தில் இந்தச் சிக்கலான முடிச்சுக்களை எவ்வாறு அவிழ்க்கலாம் என்பதிலேயே சமாதான நடவடிக்கையின் எதிர்காலம் தங்கியுள்ளது. ஒன்றில் தேர்தலில் வெற்றிபெற்ற கையோடு தங்களுக்கு வாக்களித்த மக்கள் மனம்மாறும் நிலையை அடைவதற்கு முன்னர் பிரச்சினைக்குத் தீர்வு காணவேண்டும். ஆனால் அது இடம்பெறவில்லை.

இல்லையேல் சமாதான முயற்சிகளை மிக முக்கிய நிலைமைக்குக் கொண்டுசென்று பிரச்சினைகளுக்குத் தீர்வு காணவேண்டும். அன்றேல தங்களுக்கு எதிராக எந்தவொரு நடவடிக்கைகளையும் மேற்கொள்ளாதவாறு ஜனாதிபதியை வைக்கும் அளவுக்கு விசேட திட்டம் உருவாக்கப்படவேண்டும்.

சமாதானத்திற்கான பயணத்தின் போது எதிர்க்கட்சியும் அதற்கான ஒத்துழைப்பை வழங்கும் நிலைமையை உருவாக்குவது மிகவும் முக்கியமானதாகும். இருப்பினும் எதிர்கட்சிகள் தங்களைத் திருப்திப்படுத்திக்கொண்டு சமாதானப் பயணத்தின்போது படகின் சுக்கானைத் தமது தலைவியின் கைகளில் ஒப்படைத்துவிட்டு ஒதுக்கியிருப்பது பேரழிவையே ஏற்படுத்திவிடலாம்.

## கோழித் திருடனுக்கு சிறைத் தண்டனை!

வலி.வடக்கு,பெப்.4

இரண்டாயிரம் ரூபா பெறுமதிமிக்க கோழிகளைத் திருடியவருக்கு மூன்று மாதகாலச் சிறைத்தண்டனை மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தினால் விதிக்கப்பட்டுள்ளது.

ஏழாலை தெற்கைச் சேர்ந்த செல்வரத்தினம் சிறீஸ்கந்தராசா என்பவர் சுன்னாகம் பொலீஸாரால் கோழித் திருட்டுச் சம்பந்தமாகக் கைதுசெய்யப்பட்டு மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டார். அங்கு எதிரி குற்றத்தை ஒப்புக்கொண்டதைத் தொடர்ந்து இந்தத் தண்டனை வழங்கப்பட்டு சிறைச்சாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டார். (க-86)

## சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு கட்டுரை - சுவரொட்டிப் போட்டிகள்

யாழ்ப்பாணம்,பெப்.4

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு 'செடேக்' நிறுவனமும் 'கியூடெக்' நிறுவன மகளிர் அமைப்பும் இணைந்து பாடசாலை மாணவர்களுக்கு இடையில் கட்டுரை மற்றும் சுவரொட்டிப் போட்டிகளை நடத்தவுள்ளன.

கட்டுரைப் போட்டி "மகளிர் - புதிய சமுதாயத்தைக்கட்டி எழுப்புதல்" என்ற கருப்பொருளில் 250 சொற்களைக் கொண்டதாக இருக்கவேண்டும் என்றும், இதில் தரம் 8,9,10 மாணவர்கள் பங்குபற்றமுடியும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

"மகளிருக்கு எதிரான வன்முறைகள்" என்ற கருப்பொருளில் நடைபெறவுள்ள சுவரொட்டிப் போட்டியில் தரம் 11,12,13 மாணவர்கள் பங்குபற்றமுடியும்.


மாணவர்கள் தமது ஆக்கங்களை 'மகளிருக்கான கட்டுரை, சுவரொட்டிப் போட்டி, கியூடெக், இல.14, மத்தியூஸ வீதி, யாழ்ப்பாணம்' என்ற முகவரிக்கு அனுப்பிவைக்குமாறும் - எதிர்வரும் 10ஆம்திகதிக்கு முன்னர் ஆக்கங்கள் அனைத்தும் தமக்குக் கிடைக்கக் கூடியதாக அனுப்புமாறும் - போட்டியில் வெற்றியீட்டும் மாணவர்களுக்கு சான்றிதழ்களும், பரிசுகளும் வழங்கப்படும் என்றும் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.(க-6)

## கல்விச்சாலைக் காட்சிகள்



யாழ்.ஈச்சமோட்டை சம்றொக் கல்வி நிலையத்தின் ஒளிவிழாவும், பரிசளிப்பு விழாவும் அண்மையில் நடைபெற்றன.

மேற்படி நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்.புனித யாகப்பர் ஆலயத்தின் உதவிப் பங்குத்தந்தை அருட்தந்தை எஸ்.அருட்செல்வனை நிறுவன இயக்குநர் த.பீற்றர் சண் விஜயசிங்கம் கைலாகுகொடுத்து வரவேற்பதைப் படத்தில் காணலாம். அருகில் சிறப்பு விருந்தினர்களில் ஒருவரான யாழ். சென்.ஜேம்ஸ் பெண்கள் பாடசாலை அதிபர் எஸ்.எஸ்.தங்கராஜா மற்றும் நிறுவன மாணவர்கள் காணப்படுகின்றனர். (ஐ-7)



கோண்டாவில் இந்து மகா வித்தியாலயத்தின் பழைய மாணவர் சங்கத்தினர் அதிஷ்டலாபச் சீட்டிழுப்பின்மூலம் பெறப்பட்ட நிதியிலிருந்து ஒரு தொகுதி தளபாடங்களை வித்தியாலய அதிபரிடம் ஒப்படைத்துள்ளனர்.

இதுதொடர்பாக இடம்பெற்ற வைபவத்தில் பழைய மாணவர் சங்கத் தலைவர் ச.யோகராசா தளபாடங்களில் ஒரு தொகுதியை வித்தியாலய அதிபர் செல்வி பா.மார்க்கண்டுவிடம் கையளிப்பதைப் படத்தில் காணலாம். அருகில் உப அதிபர் இ.அருணகிரிவாசன் மற்றும் விருந்தினர்கள் காணப்படுகின்றனர். (ஐ-7)



வட்டு.மத்திய கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி கடந்த வாரம் நடைபெற்றது. இந்நிகழ்வில் வலிகாமம் கல்வி வலய உடற்கல்விப் பணிப்பாளர் பி.பாலசிங்கம், அதிபர் சிவஞானபோதன் ஆகியோர் மங்களவிளக்கேற்றிவைப்பதைப் படத்தில் காணலாம். மேலதிக அரச அதிபர் து.வைத்திலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார். (ஐ)



நெடுந்தீவு சீக்கிரியாம்பள்ளம் அரசினர் தமிழ்க் கலவன் வித்தியாலயத்தின் ஒளிவிழாவும், அரங்கத் திறப்பு விழாவும் அண்மையில் நடைபெற்றன.

இந்த நிகழ்வுகளில் பிரதம விருந்தினர்களாகக் கலந்துகொண்ட பங்குத் தந்தை எம்.எல்.மொன்பேட் அடிகளார் மங்கள விளக்கேற்றுவதையும், கோட்டக் கல்விப் பணிப்பாளர் க.அரசரட்ணம் புதிதாக அமைக்கப்பட்ட அரங்கத்தினைத் திறந்து வைப்பதையும் படத்தில் காணலாம். பாடசாலை அதிபர் கெ.அன்ரன் மரியதாசும் படத்தில் காணப்படுகின்றார். (ஐ-7)

யாழ்.மாவட்டத்தில் சேதமடைந்துள்ள

# 17 பாடசாலை புனரமைப்புப் பணிகள் 2½ கோடி ரூபா செலவில் ஆரம்பம்

யாழ்ப்பாணம்,பெப்.4

யாழ்.மாவட்டத்தில் சேதமுற்ற 17 பாடசாலைகளின் கட்டடங்கள் 2 கோடியே 30 லட்ச ரூபா செலவில் ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனத்தின் நிதி உதவியோடு புனரமைப்புச் செய்யப்படவுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் தென்மராட்சி தவிர்ந்த வடமராட்சி, வலிகாமம், யாழ்ப்பாணம், தீவகம் ஆகிய நான்கு கல்வி வலயங்களில் உள்ள பாடசாலைகளே புனரமைப்புச் செய்யப்படவுள்ளன.

இந்த வேலைத் திட்டத்தில் முதற்கட்டமாக தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி, யாழ்.வைத்தீஸ்வரா வித்தியாலயம், நாரந்தனை றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை, வேலணை தெற்கு ஐயனார் வித்தியாலயம், கோப்பாய் வடக்கு கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை, உடுப்பிட்டி இமையாணன் தமிழ்க் கலவன் பாடசாலை, உடுப்பிட்டி மகளிர் கல்லூரி, குப்பிளான் விக்னேஸ்வரா வித்தியாலயம் ஆகிய 8 பாடசாலைகளின் புனரமைப்பு வேலைகள் உடன் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் -

ஏனைய பாடசாலைகளின் வேலைகள் ஆரம்பிப்பதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருவதாகவும் -

ஜேர்மன் தொண்டு நிறுவனத்தின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதேவேளை -

யாழ்.மாவட்டத்தில் நான்கு கல்வி வலயங்களில் உள்ள 90 பாடசாலைகளுக்கு மாணவர்களின் அடிப்படைச் சுகாதார வசதியான மலசலகூடங்களை உடன் அமைத்துக் கொடுக்கவும் தமது நிறுவனம் நடவடிக்கையினை மேற்கொண்டுள்ளதாகவும் -

இதற்கான கட்டட வேலைகள் உடன் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார். (க-180)



ஸ்ரீலங்கா அரசின் 100 நாள் அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் பருத்தித்துறைப் பொலீஸார் அண்மையில் மந்திகை மருத்துவமனையில் சிரமதானம் மேற்கொண்டனர்.

சிரமதானத்தில் கலந்துகொண்ட பருத்தித்துறைப் பொலீஸ் நிலைய தலைமைக் காரியாலய இன்ஸ்பெக்டர் லால்குமார தேவஹிரி, பொலீஸ் இன்ஸ்பெக்டர் ஆர்.மொகமெட், பருத்தித்துறை மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் எஸ்.கதிரவேல்பிள்ளை ஆகியோரையும் வைத்தியசாலை உத்தியோகத்தர்களையும் படத்தில் காணலாம்.

*படம்: நெல்லியடி செய்தியாளர்)*

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம்,பெப்.4

உரும்பிராய் கருணாகரப் பிள்ளையார் ஆலயத்தில் இன்று திங்கட்கிழமை காலை மணவாளக்கோல விழா ஆரம்பமாகும். காலை 9 மணிக்கு ஆயிரத்தெட்டு சங்குகளால் சங்காபிஷேகம் நடைபெறும்.

மாலை 4.30 மணிக்கு விசேட மேளக்கச்சேரியைத் தொடர்ந்து சைவப்புலவர் மு.திருஞானசம்பந்தப் பிள்ளையின் சொற்பொழிவும் வீ.கே. நடராசா குழுவினரின் இசைநிகழ்வும் இடம்பெறும். மாலை 6.30 மணிக்கு கருணாகரப் பெருமான் திருவீதியுலா வருவார். (க-6-ரி)

★ ★ ★

யாழ்ப்பாணம்,பெப்.4

காரைநகர் வடக்கு அருள்மிகு மருதடி வீரகத்தி விநாயகர் ஆலய பாலஸ்தாபன கும்பாபிஷேகம் இன்று திங்கட்கிழமை காலை 6.15 மணிக்கு நடைபெறும். (க-6)

## இராமகிருஷ்ண ஜெயந்தி விழா

யாழ்ப்பாணம்,பெப்.4

சுவாமி விவேகானந்தரின் 140 ஆவது ஜெயந்தி விழா திருநெல்வேலி இராமகிருஷ்ண ஆலயத்தில் இன்று காலை 5 மணிக்கு இடம்பெறவுள்ளது.

மங்கள இசையுடன் ஆரம்பமாகும் இந்நிகழ்வில் பூசை வழிபாடுகளைத் தொடர்ந்து -

இராமகிருஷ்ணாலய இயக்குநர் இ.ராஜா மகேந்திரசிங்கம் சிறப்புச் சொற்பொழிவாற்றுவார். (க-9)

## ஆலோசனை கூட்டம்

பச்சிலைப்பள்ளி மக்கள் நலன் காக்கும் கழகத்தின் பிரதிநிதிகளுக்கான கூட்டம் இன்று பிற்பகல் 2மணிக்கு புலோலியிலுள்ள பளை மத்திய கல்லூரி மண்டபத்தில் நடைபெறுகிறது.

இக் கூட்டத்தில் பொதுமக்கள் தமது ஆலோசனைகளை முன்வைகலாம் எனக் கழகச் செயலாளர் துதிரவியரத்தினம் அறிவித்துள்ளார். (ஒ-117)

# பற்றைக் காடாகக் காட்சிதரும் கோட்டை முனியப்பர் கோயில் பகுதி!

யாழ்ப்பாணம்,பெப்.4

யாழ்கோட்டை முனியப்பர் ஆலய சூழலிலும், முற்றவெளிப் பகுதியிலும் பற்றைகள் வளர்ந்து அந்தப் பிரதேசமே காடாகக் காட்சியளிக்கிறது.

யாழ்.மாநகரசபை ஊழியர்களால் இப்பிரதேசம் முன்னர் சிரமதானம் மூலம் துப்புரவு செய்யப்பட்டது. ஆனால் மீண்டும் முனியப்பர் கோயில் சுற்றாடல் காடாகக் காணப்படுவதால் மக்கள் நடமாட அஞ்சுகின்றனர். கடந்த வருடம் முனியப்பர் ஆலயத்துக்கு அண்மையில் இருந்த சுரங்கப் பாதை ஒன்றில் இருந்து அடையாளம் காணப்படாத இளைஞர் ஒருவரின் சடலம் புதர்களுக்கு மத்தியில்இருந்து மீட்கப்பட்டது. அதைத் தொடர்ந்து அந்தப் பகுதியை படையினர் கனரக வாகனங்களின் உதவியுடன் துப்புரவு செய்திருந்தனர்.

தற்போது மீண்டும் வளர்ந்து மூடியுள்ள பற்றைகளை அழித்து மக்களின் அச்ச உணர்வை நீக்க மாநகரசபை நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (க-6)

## அதிபர் கூட்டம்

யாழ்ப்பாணம்,பெப்.4

கோப்பாய் கோட்ட பாடசாலை அதிபர்களுக்கான கூட்டம் ஒன்று நாளை செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் கோப்பாய் கோட்டத்திற்குட்பட்ட அதிபர்கள் அனைவரையும் தவறாது சமுகமளிக்குமாறு கோட்டக் கல்வி அதிகாரி கேட்டுள்ளார். (க-6-72)

வடமராட்சியில் கசிப்பு உற்பத்தி, விற்பனை

# 8 பெண்கள் உட்பட 14 பேருக்கு 32ஆயிரம் ரூபா அபராதம்!

யாழ்ப்பாணம்,பெப்.4

வடமராட்சிப் பகுதியில் கசிப்பு உற்பத்தி மற்றும் விற்பனையில் ஈடுபட்டுவந்த 8 பெண்கள் உட்பட 14 பேருக்கு எதிராக பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றில் வடமராட்சிப் பிரதேச மதுவரி உத்தியோகத்தர்களால் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன.

எதிராளிகள் தமது குற்றத்தை ஒப்புக்கொண்டதை அடுத்து நீதிவான், அவர்களைக் குற்றப்பணம் செலுத்துமாறு உத்தரவிட்டார். அவர்களுக்கு மொத்தமாக 32 ஆயிரத்து 450 ரூபா அபராதமாக விதிக்கப்பட்டது.

வடமராட்சிப் பகுதியில் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டவர்களின் பெயர் விவரம் வருமாறு:-

கார்த்தி அரியான் (கரவெட்டி கிழக்கு), பிரபாகரன் புஷ்பராணி (செந்தில்நகர், பளை), தங்கராசா லட்சுமி (அல்வாய் வடக்கு), மகாலிங்கம் வள்ளிப்பிள்ளை (அல்வாய் வடக்கு), குமாரு மகேஸ்வரி (அல்வாய் தெற்கு), கணபதி தம்பன் (உடுப்பிட்டி வடக்கு), ஞானமூர்த்தி அருளானந்தம் (ஆதிகோயிலடி) -

சின்னத்துரை வள்ளி (கரவெட்டி வடக்கு), ராசம்மா வேலாயுதம் (துன்னாலை வடக்கு), வல்லிபுரம் ரவிச்சந்திரன் (வல்வெட்டித்துறை), இளையதம்பி பூமணி (அல்வாய் வடக்கு), நேசராசா சீனிவாசன் (பருத்தித்துறை), கிட்டினன் சீதேவி (துன்னாலை தெற்கு), நடனசிகாமணி தவராசா (வல்வெட்டித்துறை - இவருக்கு 4மாத சிறைத் தண்டனை வழங்கப்பட்டது) (க-6)



யாழ்.மனித முன்னேற்ற நடுநிலையம் வறிய மாணவர்களுக்கு பாடசாலை உபகரணங்களை வழங்கிய நிகழ்வின்போது யாழ்.ஆயர் அதிவண.தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை வறிய மாணவன் ஒருவனுக்குப் பாடசாலை உபகரணங்களை வழங்குவதைப் படத்தில் காணலாம். அருகில் அருட்தந்தை எஸ்.ஸ்ரனிஸ்லோஸ் (அ.ம.தி.) அடிகளும் காணப்படுகிறார்.

*(படம்: குருநகர் செய்தியாளர்)*

# மரண அறிவித்தல்கள்

## திருமதி செல்லம்மா கந்தையா

நல்லூரைப் பிறப்பிடமாகவும், கல்முனையை வதிவிடமாகவும் கொண்டு, தற்பொழுது லண்டனில் வசித்தவரான திருமதி செல்லம்மா கந்தையா லண்டனில் நேற்று (03.02.02) ஞாயிறு காலை காலமாகிவிட்டார்.

அன்னார் நல்லூரைச் சேர்ந்த காலஞ்சென்ற சபாபதி சரவணமுத்து - இராசம்மா தம்பதிகளின் மூத்த புதல்வியும் மட்டக்களப்பு தாமரைக்கேணியைச் சேர்ந்த காலஞ்சென்ற பொ.வி.கந்தையா ஜே.பி. (பிரசித்த நொத்தாரிஸ் - கல்முனை) அவர்களின் அன்பு மனைவியும் சிவபாதசுந்தரம் B.A. (Chartered Accountant), பாலசுந்தரம் (Chartered Accountant - U.K.), இராசசுந்தரம் (Textile Technologist, Australia), திருமதி Dr.காந்திமதி ஜெகதீசன் (M.D. - U.S.A.) ஆகியோரின் அன்புத் தாயாரும் Dr.க.ஜெகதீசன் (M.D. - U.S.A.), நிர்மலா, ரஜனி, கமலா ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்ற Dr.ச.செல்வரத்தினம், வைத்திய கலாநிதி ச.சபாரத்தினம் (கொழும்பு), திருமதி த.பராசக்தியம்மா (பருத்தித்துறை), திருமதி ப.சரஸ்வதியம்மா (நல்லூர்), ச.சுந்தரலிங்கம் B.Sc. (இ.போ.ச. - மட்டக்களப்பு) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகளும், தகனக்கிரியையும் நாளை (05.02.2002) செவ்வாய்க்கிழமை லண்டனில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*107, செல்லர் வீதி, நல்லூர்.* லயன் வல்லிபுரம் பரமசிவம் *ஜே.பி.* (மைத்துனர்) (287)

## திருமதி முத்தையா இராசம்மா

பெரியவிளானைச் சேர்ந்த திருமதி முத்தையா இராசம்மா நேற்று (03.02.2002) ஞாயிற்றுக்கிழமை காலை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற முத்தையாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற சின்னத்தம்பி மற்றும் அன்னம்மா, காலஞ்சென்ற சின்னாச்சி மற்றும் தங்கம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும் அப்புத்துரை, சிவபாக்கியம், தவமணி, இராணி ஆகியோரின் அன்புத் தாயாரும் பரமேஸ்வரி, மகாதேவன், காலஞ்சென்ற சோதிராசா மற்றும் ரஞ்சிதானந்தம் ஆகியோரின் அன்பு மாமியாரும் பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள், மருமக்கள், (கொழும்பு, ஜேர்மனி, பிரான்ஸ், சுவிஸ்) ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.02.2002) திங்கட்கிழமை நண்பகல் 12 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் சிறுவிளான் மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*பெரியவிளான்.* (285) மு.அப்புத்துரை (மகன்)

## பத்திநாதர் அருளானந்தம்

பருத்தித்துறை, தும்பளையைச் சேர்ந்த பத்திநாதர் அருளானந்தம் (இளைப்பாறிய உப அதிபர் - பரு./சித்திவிநாயகர் வித்தியாலயம்) நேற்று (03.02.2002) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் பிலோமினாவின் அன்புக் கணவரும் பத்திநாதர் - யோசப் தம்பதியினரின் அன்பு மகனும் மரியாம்பிள்ளை - செபமாலை தம்பதியினரின் மருமகனும் அமலதயாவதி (ஆசிரியை - பதுளை), இன்பச்செல்வி, மங்களச்செல்வி (கனடா), புனிதச்செல்வி (ஜேர்மனி), அன்ரன் அருந்தவராசா (பதுளை), அமலதயாளினி, அலயயாழினி ஆகியோரின் பாசமிகு தந்தையும் எலிசபெத்தம்மா, செபமாலையம்மா, அன்ரனி யாய்பிள்ளை (அருட்சகோதரி - நீர்கொழும்பு), அமலஉற்பவம், புஸ்பானந்தம், பேரானந்தம் ஆகியோரின் சகோதரரும் தெய்வேந்திரம் (ஆசிரியர்-பதுளை), எட்வேட் மரியதாஸ், அல்வீனஸ் (கனடா), வர்ணசீலன் (ஜேர்மனி) ஆகியோரின் மாமனாரும் செபஸ்தியாம்பிள்ளை (கனடா), இராசேந்திர அருளப்பு, பிரான்சிஸ் திரவியம், லூர்த்தம்மா, திரேசம்மா ஆகியோரின் மைத்துனரும் திவ்யா, தொம்சன், டிலக்சன், ஜான்சன், பிரன்கா, ஜொய்சன், கொன்ஸ்தலன், கொன்ஸ்விக் ஆகியோரின் பேரனுமாவார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*"நெய்தலங்கானல்" வெளிச்சவீட்டு வீதி, பருத்தித்துறை.* (290) எட்வேட் மரியதாஸ் (மருமகன்)

## திருமதி உமாதேவி சொர்ணலிங்கம்

நாவற்குழியைச் சேர்ந்த திருமதி உமாதேவி சொர்ணலிங்கம் 02.02.2002 சனிக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் நாவற்குழியைச் சேர்ந்த காலஞ்சென்ற செல்லப்பா - அன்னம்மா தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்ற ஓவசியர் சொர்ணலிங்கத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற நாவற்குழியூர் நடராஜனின் அன்புச் சகோதரியும் கைலைநாதன், கமலாதேவி, கணேசநாதன், துவாரகன், விமலாதேவி ஆகியோரின் பாசமிகு தாயாரும் பத்மா, அருணகிரிநாதன், ரூபா, தவம், காலஞ்சென்ற மகேந்திரன் ஆகியோரின் ஆசைமாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (03.02.2002) ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*34, காசல் ஒழுங்கை, பம்பலப்பிட்டி.* (294) சோ.கணேசநாதன் (மகன்)

## திருமதி நாகலிங்கம் இலட்சுமி

மயிலிட்டி தெற்கு, கட்டுவனைப் பிறப்பிடமாகவும், முகாந்திரா வீதி, மல்லாகம் மத்தியைத் தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நாகலிங்கம் இலட்சுமி நேற்று (03.02.2002) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற நாகலிங்கம் அவர்களின் அன்பு மனைவியும் தவமணி (பிரான்ஸ்), கனகாம்பிகை (இந்தியா), தவராஜா, செல்வராணி, செல்வரத்தினம், செல்வராஜா (பிரான்ஸ்), சிறிமுருகராஜா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும் நவரத்தினம், நல்லையா, பவளம்மா, சிவலோகநாதன், சிவசோதி (உத்தியோகத்தர் - ப.நோ.கூ. சங்கம், தெல்லிப்பழை), அனுசியா ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.02.2002) திங்கட்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் மல்லாகம் மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*முகாந்திரா வீதி, மல்லாகம் மத்தி. (காங்கேயன் பேக்கரி அருகில்)* (295) நா.செல்வரத்தினம் (மகன்)

## ST.JOHN'S COLLEGE JAFFNA.

The sports meet fixed for today 4th February 2002 is postponed.

The next date will be notified later.

இன்று (04.02.2002) திங்கட்கிழமை நடைபெறவிருந்த விளையாட்டுப்போட்டி பிற்போடப்பட்டுள்ளது.

மறுதிகதி பின்னர் அறிவிக்கப்படும்.

- அதிபர்.

(C/20599)

## தமிழ்த் தேசிய கூட்டமைப்பு
## உள்ளூராட்சித் தேர்தல் பற்றிய முக்கிய
# அறிவித்தல்

தமிழர் விடுதலைக் கூட்டணி, தமிழ் ஈழ விடுதலை இயக்கம் (ரெலோ), அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ், ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (ஈ.பி.ஆர்.எல்.எவ். - சுரேஸ் அணி) ஆகிய நான்கு கட்சிகள் அடங்கிய தமிழ்த் தேசிய கூட்டமைப்பு எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடுவதெனத் தீர்மானித்துள்ளது.

பின்வரும் சபைகளுக்கு தலைவர், உபதலைவர் மற்றும் உறுப்பினர்கள் பதவிகளுக்கு போட்டியிட விரும்புவோர் தமது சுய விவரங்களுடன் விண்ணப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

1. யாழ்ப்பாணம் மாநகரசபை
2. வல்வெட்டித்துறை நகரசபை
3. பருத்தித்துறை நகரசபை
4. சாவகச்சேரி நகரசபை
5. ஊர்காவற்றுறை பிரதேச சபை
6. நெடுந்தீவு பிரதேச சபை
7. வேலணை பிரதேச சபை
8. வலிகாமம் மேற்குப் பிரதேச சபை
9. வலிகாமம் வடக்கு பிரதேச சபை
10. வலிகாமம் தென்மேற்குப் பிரதேச சபை
11. வலிகாமம் தெற்கு பிரதேச சபை
12. வலிகாமம் கிழக்கு பிரதேச சபை
13. வடமராட்சி தென்மேற்கு பிரதேச சபை
14. பருத்தித்துறை பிரதேச சபை
15. சாவகச்சேரி பிரதேச சபை
16. நல்லூர் பிரதேச சபை

ஒவ்வொரு சபையிலும் போட்டியிடும் வேட்பாளர்களில் நாற்பது வீதத்தினர் (40%) 35 வயதுக்குட்பட்டவர்களாக இருக்க வேண்டும் என்பதைக் கவனத்திற்கொள்ளவும்.

விண்ணப்பங்கள் "தேர்தல் நியமனத் தெரிவுக்குழு" தமிழ்த் தேசிய கூட்டமைப்பு, தமிழர் விடுதலைக் கூட்டணி அலுவலகம், 57/48, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் என்ற விலாசத்திற்கு நாளை (05.02.2002) செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக நேரில் சமர்ப்பிக்கவும். நேர்முக ஆய்வு தேவைப்படின் 05.02.2002 காலை 10 மணி முதல் மாலை 6 மணி வரை சமுகமளிக்கத் தயாராக இருக்க வேண்டும் எனவும் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

தேர்தல் நியமனத் தெரிவுக்குழு,
தமிழ்த் தேசிய கூட்டமைப்பு.
தமிழர் விடுதலைக் கூட்டணி அலுவலகம்,
*57/48, ஸ்ரான்லி வீதி,*
*யாழ்ப்பாணம்.*

(304)

## 17ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
03
-
04
-
1920



மறைவு
04
-
02
-
1985

### அமரர் நாராயணசாமி இராமசாமி

அன்போடு எம்மை ஆதரித்து வளர்த்த அப்பாவே!
ஆண்டுகள் பதினேழு கடந்தாலும் நினைவுகள் மறக்கவில்லை
பண்போடு வாழ்ந்த நாள்கள் மறக்க முடியாதவை
ஆத்மா சாந்தி பெறப் பிரார்த்திக்கின்றோம்.

மக்கள், மருமக்கள்,
மைத்துனர்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

*கேதீஸ்வரன் ஸ்ரோர்ஸ்,*
*119, 3 2, மானிப்பாய் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

(299)

# கடந்த நான்கு தினங்களில் 230 மில்லி மீற்றர் மழை பதிவு!

யாழ்ப்பாணம்,பெப்.4

வங்காள விரிகுடாவில் ஏற்பட்டுள்ள தாழமுக்கம் காரணமாக குடாநாட்டில் கடந்த 4 தினங்களாக தொடர்ந்து பெய்துவரும் மழையால் தாழ் நிலப்பரப்பில் வெள்ளம் தேங்கியுள்ளது.

காலம் தப்பிப் பெய்யும் மழையால் குடாநாட்டு மக்களின் இயல்பு வாழ்க்கை நேற்றும் பாதிக்கப்பட்டது.

கடந்த 4 தினங்களில் 230 மில்லி மீற்றர் மழை பெய்துள்ளது. நேற்று அதிக உயர் வெப்ப நிலையாக 26.4 பாகை செல்சியஸ் வெப்பநிலை பதிவாகியுள்ளதாக திருநெல்வேலியில் உள்ள வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதேவேளை -

நேற்றுமுன்தினம் மழை வீழ்ச்சி குறைந்து காணப்பட்டதால் பெருமூச்சுவிட்ட விவசாயிகள் நேற்றுப் பெய்த மழையால் மீண்டும் குழப்பமடைந்தனர்.

பல இடங்களில் வயல்களில் அறுவடை செய்யப்பட்டு வைக்கப் பட்டிருந்த நெற்போர்களைச் சுற்றி சுமார் இரண்டு அடி மழை வெள்ளம் தேங்கியுள்ளது.

இந்த வெள்ளம் வழிந்தோடி தமது நெற்போர்களை சூடு அடிக்க முன்னர் நெல்மணிகள் மீண்டும் முளைத்துவிடும் என்று விவசாயிகள் கலங்கி நிற்கின்றனர்.

இதேவேளை -

தற்போதைய வளிமண்டல குழப்பச் சூழ்நிலை இன்று பிற்பகலுடன் சீரடைவதற்கான அறிகுறிகள் தென்படுவதாக வளிமண்டல அவதானிப்பு நிலைய அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ஐ-6)

## எரிகாயங்களுடன் தாயும் மகளும் அனுமதி

யாழ்ப்பாணம்,பெப்.4

கைவிளக்கிற்கு மண்ணெண்ணெய் விட்டபோது அது தட்டுப்பட்டு எண்ணெய் சிதறுண்டதில் தீப்பற்றி தாயும மகளும் எரிகாயங்களுக்குள்ளாகினர்.

நேற்று மாலை இடம்பெற்ற இச்சம்பவத்தில் உடுவில் டச்சு வீதியைச் சேர்ந்த வேலாயுதபிள்ளை மதனேஸ்வரி (வயது 39) என்ற நான்கு பிள்ளைகளின் தாயும் அச்சமயத்தில் அருகில் நின்ற அவரது மகளான வே.ஜனனி (வயது 12) என்ற சிறுமியும் எரிகாயங்களுக்குள்ளாகினர்.

காயமடைந்த இருவரும் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ஐ-9)

## மரத்தால் வீழ்ந்து காயம்

யாழ்ப்பாணம்,பெப்.4

மழைபெய்த சமயம் பனைமரத்தில் ஏறிய ஒருவர் தவறி வீழ்ந்து படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனாவைத்தியசாலை அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

ஊரெழு மேற்கைச் சேர்ந்த நவரட்ணம் ஜெயபாலன் (வயது - 26) என்பவரே மரத்தால் தவறி வீழ்ந்தவராவார். (ஐ-6)

## வலைப்பந்தாட்டம் ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம்,பெப்.4

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் யாழ். மாவட்டக் கிளையினர் யாழ். இந்து மகளிர் கல்லூரி மைதானத்தில் இன்று நடத்தவிருந்த வலைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி சீரற்ற காலநிலை காரணமாக ஒத்திவைக்கப்பட்டுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-3)


நிறைஞ்சனாஸ்
சாங்கானை
விஜயகாந்த், ரம்யாகிருஷ்ணன், ரகுவரன் நடிக்க
நரசிம்மா
11.00, 2.30, 3.30
(C/20572)

ராஜா யாழ்ப்பாணம்
கமலஹாசன், சிம்ரன், எஸ்பிநகர் அப்பாஸ் நடிப்பில்
பம்மல் K சம்பந்தம்
தினசரி: 10.30, 2.10 (புதிய நேரம்)
சனி, ஞாயிறு: 10.30, 2, 4 (பி.நே.)
(C/20571)

நாகம்மாஸ் சுன்னாகம்
விஜய், பூமிகா, வேணு, விவேக், வடிவேலு நடிக்க
பத்ரி
காட்சிகள் 11.00, 3.00 (முதல்நேரம்)
(275)


## காற்றினால் குடிசை சாய்ந்தது

நெல்லியடி,பெப்.4

கடும் காற்றினாலும் மழையினாலும் இரவுவேளை மண் குடிசை ஒன்று சாய்ந்தது. அங்கு உறங்கிக் கொண்டிருந்த 3 சிறுவர்கள் உட்பட 6 பேர், தெய்வாதீனமாகக் காயம் எதுவுமின்றி உயிர்தப்பினர்.

இச்சம்பவம் கடந்த வியாழக் கிழமை, இரவு 10 மணியளவில் புலோலி கிழக்கு சந்தா தோட்டம் பகுதியில் இடம்பெற்றது.

(ஐ-109)

## மணிவிழா ஆலோசனைக் கூட்டம்

யாழ்ப்பாணத்தின் கல்விமான்களில் ஒருவரும், யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தரும் யாழ். மாவட்டத்தில் உயர் கல்வித்தரத்தை உயர்த்த அயராது உழைத்து வருபவருமாகிய பேராசிரியர் பொன்.பாலசுந்தரம் பிள்ளை அவர்களுக்கு மணிவிழா எடுக்க அவரின் அபிமானிகளும், வியப்போரும் பெரிதும் விரும்புவதால் இதையிட்டு ஆலோசிப்பதற்கு அவரின் அன்பர்களும், மாணவர்களும், ஆர்வலர்களும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*இடம்* :- நல்லை ஆதீனம்
*காலம்* :- இன்று 04.02.2002 பிற்பகல் 4.00 மணி.

அழைப்பாளர்
க.சிவராமலிங்கம்
முன்னாள் பிரதி அதிபர் யாழ்.இந்துக் கல்லூரி.

(C/20600)

## திருமறைக் கலாமன்றம்

நடத்தும்

# விழுது - 2002

நிகழ்ச்சித் தொடர் - 01

காலம் : இன்று (04-02-2002) திங்கட்கிழமை
நேரம் : காலை 10.30 மணி, மாலை 3.00 மணி
இடம் : *ராஜலக்ஷ்மி திரையரங்கு, நெல்லியடி*

நிகழ்ச்சிகள்
- கூடித்துயர் வெல் (சிறுவர் நாடகம்)
- ஏகலைவன் (நாட்டுக்கூத்து)

இவற்றுடன் நடன நிகழ்வுகளும் அரங்கேறுகின்றன.

அன்பளிப்பு 20/=, 50/=, 100/=

நுழைவுச்சீட்டுக்களை திரையரங்க வாயிலில் பெற்றுக்கொள்ளலாம்.

*238, பிரதான வீதி,*
*யாழ்ப்பாணம்.*
- திருமறைக் கலாமன்றம்.

(C/20597)

## அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ்

தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்பு

# அவசர வேண்டுகோள்

யாழ். மாவட்ட உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல்களில் தமிழ்க்காங்கிரஸ் சார்பில் போட்டியிட விரும்பும் வேட்பாளர்களும், தொகுதிக்கிளைகளின் தலைவர்களும், செயலாளர்களும் வேட்பாளர் பட்டியலைத் தயாரித்து நாளை 5ஆம் திகதி காலை 10.00 மணிக்கு முன் தலைமைச் செயலகத்தில் நேரில் ஒப்படைக்கவும்.

*126, 3ஆம் குறுக்குத்தெரு,*
*யாழ்ப்பாணம்.*
(303)
- அ.இ.தமிழ்க்காங்கிரஸ்

## நன்றி நவில்கின்றோம்

நவாலி தெற்கு நோர்லி என்ரப்பிறைசஸ் இயக்குநர்

### அமரர் டானியல் ஞானப்பிரகாசம் அவர்களின்

இறுதிச்சடங்கின்போது வழிபாடுகளுடன் ஆறுதல் கூறிய அருட்தந்தையர் அருட்சகோதரிகள், பக்தச் சபைகளுக்கும், மலர்வளையம், கண்ணீர் அஞ்சலிகள் செலுத்திய யா/புனிசால்ஸ் ம.வி., மானிப்பாய் மகளிர் கல்லூரி, யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞான பீடமானவர், பேராதனைப் பல்கலைக்கழக பொறியியல் பிரிவு மாணவர், ஆசிரியர்களுக்கும் மரணச்சடங்கின் போது கலந்து பல்வேறு வழிகளிலும் உதவிய உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் நெஞ்சார நன்றி நவில்கின்றோம்.

தகவல்:
திருமதி பி.எவ்.சின்னத்துரை (305)

மனைவி, மக்கள்
சகோதரர், சகலர்.

## மரண அறிவித்தல்

### திருமதி சதாசிவம் இராசம்மா

வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகவும் தற்போது சதுமலையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சதாசிவம் இராசம்மா நேற்று (03.02.2002) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சதாசிவத்தின் அன்பு மனைவியும் பேரின்பமலர் (மலர்), தில்லைநாதன், சிவமலர், ரவிச்சந்திரன் ஆகியோரின் அன்புத் தாயாரும், சரோஜினிதேவி (மைனா), தியாகேசன் (செங்குந்த இந்துக் கல்லூரி), சிவதேவி ஆகியோரின் அன்பு மாமியாரும், குமணன், மதுவந்தி, கதீபன், டினோஜா, ஐங்கரன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.02.2002) திங்கட்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சதுமலை தெற்கு,*
*மானிப்பாய்.*
(306)

தகவல்:
பிள்ளைகள்

# புலிகள் பெயரில் கப்பம், கொள்ளை: எச்சரிக்கையாக இருக்க அறிவுறுத்து!

மட்டக்களப்பு,பெப்.4

புலிகளின் பெயரைப் பயன்படுத்தும் கொள்ளையர்களிடம் ஏமாறவேண்டாம்.

விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட அரசியல் பிரிவு வெளியிட்ட ஓர் அறிக்கையில் இப்படித் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

பிறந்துவிட்ட புதிய ஆண்டில் பதவி ஏற்றுள்ள அரசுக்கு நல்லெண்ண சமிக்ஞையாக எமது தேசியத் தலைவர் ஒரு தலைப்பட்ச யுத்தநிறுத்தத்தை அறிவித்தார். அதை ஏற்று அரசும் மோதல் தவிர்ப்பை அறிவித்து அமுல்படுத்தி வருகிறது. யுத்த சூழ்நிலைக்குள் தங்கள் வாழ்வின் பெரும்பகுதியை கழித்துவிட்ட எமது மட்டக்களப்பு - அம்பாறை தமிழ்பேசும் மக்கள் சொல்லொணா துன்ப துயரங்களைச் சுமந்து நிற்கின்றார்கள்.

கடந்த காலங்களில் நடைமுறைப்படுத்திய யுத்தநிறுத்தங்களும் பேச்சுவார்த்தைகளும் இடைநடுவில் முறிந்துபோன கசப்பான பட்டறிவினால எமது மக்கள் அச்சம் கலந்த மனநிலையிலேயே தங்களது அன்றாட வாழ்வைக் கழித்துக்கொண்டிருக்கிறார்கள்.

இச்சூழ்நிலையைப் பயன்படுத்தி இராணுவத்தினரின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் புலிகளின் பெயரில் பல தரப்பட்ட கொள்ளைச் சம்பவங்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது.

பணம் பறித்தல், வீடுகளில் கொள்ளையடித்தல், நகைகளை அபகரித்தல், முஸ்லிம் சகோதரர்களின் கடைகளில் பொருள்களைக் கொள்வனவு செய்துவிட்டு புலிகளின் பெயரைக் கூறி பணம் கொடுக்காது செல்லுதல், புலிகளின் இலட்சினைக் கடிதம் கொடுத்து காசுகேட்டல் போன்ற பல்வேறு சம்பவங்கள் நடைபெற்றுவருகின்றன.

யுத்தத்தின் மூலம் மிகுந்த இலாபம சம்பாதித்துவந்த ஒருசில தமிழ் ஆயுதக்குழுக்களே இச்சமாதானச் சூழலைக் குழப்பிவிடும் நோக்கிலும், முஸ்லிம் சகோதரர்களுக்கு புலிகளின் மீது வெறுப்பை ஏற்படுத்தி அரசிற்கு அழுத்தத்தைக் கொடுக்கும் நோக்கிலும், திட்டமிட்டு செயற்படுகிறார்கள்.

- அன்பார்ந்த தமிழ் பேசும் மக்களே!

அரச படைகளுடன் இணைந்து செயற்படும் ஆயுதக்குழுக்களும், புலனாய்வுப் பிரிவு போர்வையில் செயற்படும் இளைஞர்களும் விசாரணை எனும் பெயரில் உங்களை வேறு இடத்திற்கு அழைத்து வீட்டைக்கொள்ளையடிக்கின்றனர். எச்சரிக்கையாக இருங்கள்!

- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-21)

## கறுப்புப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இன்றைய மறியற் போராட்டத்துக்கு குடாநாட்டின் பொது அமைப்புகள் பூரண ஆதரவை நல்க வேண்டும் என்று கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசத் தலைவர் எஸ்.தவரட்ணம் வேண்டுகோள் விடுத்திருக்கிறார்.

இதேவேளை -

மீனவர்களின் மறியற் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து இன்று குருநகர் பகுதியில் பூரண ஹர்த்தால அனுஷ்டிக்கப்படவுள்ளது.

குருநகர் பகுதியிலுள்ள அனைத்து வர்த்தக ஸ்தாபனங்களும் இன்று மூடப்பட்டிருக்கும் என குருநகர் வர்த்தகர் சங்கம் தெரிவித்தது.

குருநகர், பாஷையூர், கொழும்புத்துறை மீனவர்கள் இன்று மீன்பிடிகச் செல்ல மாட்டார்கள் எனச் சங்கங்கள் தெரிவித்தன. (ஐ-6-15-51-180)


தகவல் தொழில் நுட்பப் பூங்கா
272, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
T.P:021-3641, E-Mail:itp@sltnet.lk

அலுவலக உத்தியோகத்தர்களின் வேண்டுகோளிற்கிணங்க...

யாழ்.மாவட்டத்தில் முதற் தடவையாக

ON LINE CLASSES



ஒவ்வொரு உத்தியோகத்தர்களுக்கும் தனித்தனி கணனியிலேயே நேரடி வகுப்புக்களும், பயிற்சியும்.

Course Title
- Diploma in PC Application And Office Management

(அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது)

Syllabus
- Computer Environment
- Ms-Word
- Ms-Excel
- Ms-Access
- Ms-Power Point

Course Fee: 2000/= only

Course Commence on 05-02-2002

Time Table (Week Days Only)
Mon to Thu - 5.00 to 7.00 pm
Duration: 3 Months

For futher Details: Information:
Course Manager Director


## எரிந்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யது தெரியவந்தது.

வீட்டின் கதவுகள் யாவும் திறந்திருந்தன. வீட்டின் பின்னால் உள்ள களஞ்சிய அறை மட்டும் பூட்டப்பட்டுக் கிடந்தது. அந்த அறையின் கதவை உடைத்து உள்ளே பார்த்தபோது எரிந்து கருகிய இரு சடலங்களின் எச்சங்கள் காணப்பட்டன. எழும்புத் துண்டுகளும், மண்டை ஓடுகளும் மட்டுமே அங்கு கிடந்தன.

இருவரின் சடலங்கள் ஒன்றாகப் போட்டு எரிக்கப்பட்டிருப்பதாக நேரில பார்த்தவர்கள் தெரிவித்தனர்.

பருத்தித்துறை நீதிவான் அபிரேம சங்கர் சம்பவ இடத்துக்கு நேற்று நேரில் சென்று விசாரணைகளை நடத்தினார்.

இரு பெண்களும் கொலை செயயப்பட்டு சடலங்கள் எரிக்கப்பட்டிருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகிறது. நெல்லியடி பொலீஸார் விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர். (ஐ-3-15-109-117)

## நோர்வேக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூடிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளதாக இணையத்தளம் ஒன்று செய்தி வெளியிட்டிருக்கிறது.

விடுதலைப் புலிகளின் அரசியல் அலோசகர் அன்ரன் பாலசிங்கத்துடன் நோர்வேத் தூதுக்குழு கடைசியாக நடத்திய பேச்சுக்கள் தொடர்பான விவரங்களை நோர்வேத் தூதர் ஜோன் வெஸ்போர்க் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு விளக்கியுள்ளார்.

பெரும்பாலும் எதிர்வரும் 19 ஆம் திகதி புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்தாகலாம் என்று அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.(ஐ-3)

## சுடர் ஒளி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கறுப்பு முகமூடி அணிந்த வேறு ஒரு வானில் வந்தவர்கள், 'சுடர் ஒளி' அலுவலக வாகனசாரதியையும், உதவியாளரையும் தாக்கிவிட்டு வாகனத்தைக் கடத்திச்சென்றனர்.

அப்பகுதியில் பெறுமதிமிக்க மேலும் பல வான்கள் உட்பட வாகனங்கள் தரித்து நிற்க 'சுடர் ஒளி' வாகனம் மட்டும் கடத்தப்பட்டுள்ளது.

தலைவர் பிரபாகரனின் படத்தை முகப்பில் அலங்கரித்த 'சுடர் ஒளி' வெளியீட்டைப் பொதுமக்களுக்கு விநியோகிக்கப்படாமல் செயவதற்காகவும் -

அந்தப்படத்தை முகப்பில் இடம் பெறச் செய்ததற்காகத் தண்டம் விதிக்கும் நோக்குடனும் -

இக்கடத்தல் திட்டமிட்டு மேற்கொள்ளப் பட்டிருக்கலாம் எனச்சந்தேகம் எழுந்துள்ளது.

இக்கடத்தல் குறித்து ஹோமகம பொலீஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது - எனினும் இச்செய்தி அச்சுக்குப்போகும்வரை கடத்தப்பட்ட வான் மீட்கப்படவில்லை. (ஐ)

## இத்தாலிக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தற்கான சான்றுகள் கிடைத்துள்ளன என்று பொலீஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்த நால்வரின் சடலங்களும் மீட்கப்பட்டு மாத்தறை ஆஸ்பத்திரியில் வைக்கப்பட்டுள்ளன.

அவற்றை அடையாளம் காண உதவும்படி பொலீஸார் கோரியுள்ளனர்.

குடியேறியகளை ஏற்றிச் சென்ற படகு ஓட்டிகளும், பயணமுகவர்களும் விபத்தைத் தொடர்ந்து தப்பித் தலைமறைவாகி விட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-3-9)

## வேட்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்றும் -

கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டது.

பிரதமர் சில விசேட ஏற்பாடுகளின் கீழ் தேர்தலை ஒத்திவைக்கும் வாய்ப்பு காணப்படுகின்றது என்றும் -

நியமனப் பத்திரங்கள் தாக்கல் செய்யப்பட்ட பின்னர் ஒத்திவைப்பு அறிவித்தல் வெளியானால் மீண்டும் தேர்தல் நடத்தப்படும் போது புதிதாக வேட்பு மனுத்தாக்கல் இடம் பெறமாட்டாது முன்னைய வேட்பு மனுக்களின் பட்டியலின்படியே தேர்தல் நடக்கும் சாத்தியம் உள்ளது என்றும் -

சுட்டிக்காட்டப்பட்டது.

இந்த நிலைமையை அடுத்தே வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்வது என்று அங்கு முடிவு செய்யப்பட்டது.

நாளை பிரதமரை சந்தித்து தேர்தல் ஒத்திவைப்புக் குறித்து கலந்துரையாடுவது என்றும் கூட்டத்தில் முடிவாகியது. (ஐ-3)


நன்றி நவில்கின்றோம்

நலமே நிறைவுற்ற

சிவநேஸ்வரநாதன் - கனகாம்பரி

தம்பதிகளின்

திருமண வைபவத்திற்கு தங்களின் சிரமங்களைச் சிறிதேனும் சிந்திக்காது சிறப்புற வருகை புரிந்து எம்முடன் இணைந்து இன்புற்று மணமக்களை வாழ்த்தி ஆசீர்வதித்த அனைத்து அன்புள்ளங்கள் அனைவருக்கும், எமக்கு வேண்டிய உதவிகள் பலவற்றையும் தளராது தாராளமாக ஈய்ந்த இனிய இதயங்கள் எல்லோருக்கும், வைபவம் செழிப்புற்றுச் சிறப்புற செயலாற்றிய செம்மல்கள் பலருக்கும் எமது உள்ளத்தின் உணர்வினில் ஊறிடும் நன்றிகளை உள்ளம் பூரித்துப் பணிவன்புடன் தெரிவித்துக்கொள்கின்றோம். திருமணம் சிறப்புற இடம்பெற மண்டபத்தை தந்துதவிய நல்லை ஆதீன முதல்வருக்கும் எமது நன்றிகள் உரித்தாக!

199/4, கில்னர் லேன்,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

கலாசூரி N.K.பத்மநாதன்
(நாதஸ்வர வித்துவான்)
குடும்பத்தினர்.

(C/20598)


# தேசியக் கொடி ஏற்றுவதை மீனவர்கள் தடுக்கக் கூடாது!

## அமைச்சர் மகேஸ்வரன் கேட்கிறார்

யாழ்.கடற்றொழிலாளர்கள் மேற்கொள்ளும் மறியற் போராட்டத்தை இருவார காலத்துக்கு இடைநிறுத்தி வைக்குமாறு இந்து கலாசார அமைசசர் தி.மகேஸ்வரன் கடற்றொழிலாளா சங்கங்களின் சமாசத்தைக் கேட்டுள்ளார்.

இது தொடர்பாக அவர் அறிக்கை ஒன்றினை விடுத்துள்ளார்.

அதில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

இன்று அரசு முன்னெடுத்துள்ள சமாதானத்தை எட்டும் முயற்சிக்கு குடாநாட்டு மக்களும் ஆதரவு வழங்கும் வகையில் அங்கு சுதந்திரதின நிகழ்ச்சிகள் இடம்பெற இடமளிக்க வேண்டும்.

நேற்றிரவு பிரதமருடன் கடற்றொழிலாளர்களின் பிரச்சினை குறித்துக் கலந்துரையாடினேன். சமாதானப் பேச்சுகளின் ஒரு கட்டத்தில் மீன்பிடித்தடையையும் நீக்குவோம் எனறு அவர் என்னிடம் தெரிவித்தார் எனவே மறியல் போராட்டத்தை இரு வாரங்களுக்கு ஒத்தி வையுங்கள். மீனவர் சங்கப் பிரதிநிதிகளை நேரடியாகச் சந்திக்க பிரதமர் விரும்புகிறார். அதற்கான ஏற்பாடுகளைச் செய்ய நான் முன்வருகிறேன்.

கடற்றொழிலாளரின் பிரச்சினையைத் தீர்க்க சிபார்சுகளைத் தரும்படி பிரதமர் என்னிடம் கேட்டுள்ளார்.

பல தரப்புகளும் விடுத்த கோரிக்கையை அடுத்து பிரதமருடன் பேசி தீர்வுகாணக்கூடிய சூழ்நிலை ஒன்றை உருவாக்கியுள்ளேன். சட்டவிரோத ஆயுதக்குழுக்களின் ஆலோசனைகளுக்கு மதிப்பளித்து செயற்படாமல் சமாதானச் சூழ்நிலை உருவாக கடற்றொழிலாளர் தங்கள் பங்களிப்பை வழங்கவேண்டும்.

யாழ்.செயலகத்தில் இன்று இடம் பெறும் சுதந்திரதின நிகழ்வுகளுக்கு வழிவிட்டு சமாதான முயற்சிகளுக்கு ஆதரவை வழங்கும்படி கேட்டுக்கொள்கின்றேன் - என்று மகேஸ்வரன் தெரிவித்துள்ளார். (ஐ-3)

## உண்ணாவிரதப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தனர்.

நேற்றுப்பகல் 10 மணியளவில் யாழ்நீதிவான் ஆர்.ரி.விக்னராஜா யாழ். சிறைச்சாலைக்கு நேரில் சென்று உண்ணாவிரதக் கைதிகளை நேரில் சந்தித்துப் பேசினார். கைதிகளின் கோரிக்கை தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் உடனடியாகப் பேசி தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதாக அப்போது கைதிகளிடம் நீதிவான் வாக்குறுதி அளித்தார்.

இதனை ஏற்றுக்கொண்ட கைதிகள் தமது போராட்டத்தை நேற்றிலிருந்து 10 நாள்களுக்கு ஒத்திவைக்க இணங்கினர்.

இதேவேளை -

யாழ்.சிறையில் உண்ணாவிரதம் இருந்த கைதிகளில் மூவர் நேற்றுக் காலை சிறைச்சாலைக் கூரை மீது ஏறி அமர்ந்து கொண்டதாகவும் -

அதனையடுத்து அங்கு உருவாகிய பதற்றத்தை அடுத்து கூடுதலான படையினர் சிறைச்சாலைப் பகுதிக்கு அழைக்கப்பட்டிருந்ததாகவும் -

தெரியவந்தது.

யாழ்மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை எஸ்சேனாதிராசா, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.சிவமகாராசா ஆகியோர் நேற்றுக கைதிகளைச் சென்று பார்வையிட்டனர். (ஐ-ஒ-6)

## கப்பல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சேவை இடம்பெறாது என்று அறிவிக்கப்பட்டது. இதனால் பயணிகள் மிகுந்த ஏமாற்றம் அடைந்தனர். பின்னர் அங்கிருந்து யாழ்நகருக்குக் கூட்டிவந்து விடப்பட்டனர்.

இந்தப் பயணிகள் ஏற்கனவே கடந்த வியாழனன்று இக்கப்பலில் புறப்பட்டு இடைவழியில் கப்பல் திருப்பப்பட்டதால் பயணம் தடைப்பட்டு திரும்பியிருந்தனர்.

இதேவேளை -

கடந்த 31 ஆம் திகதி பயணம் செய்வதற்காகப் பயணச்சீட்டுப் பெற்றவர்களைப் பயணஏற்பாடுகளுடன் நாளை செவ்வாய்க்கிழமை யாழ்சிவில் நிர்வாக அலுவலகத்துக்கு வரும்படியும் -

நாளைய தினம் பயணம் செய்யப பணச்சீட்டுப் பெற்றவர்கள் எதிர்வரும் வியாழக்கிழமை பயணம் செய்ய ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாகவும் -

கப்பல் முகவர் அறிவித்துள்ளார்.

## இன்றைய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கியத்துவம்பெற்ற நிகழ்ச்சியாக அமைகிறது.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி ஆட்சிக்காலத்தில் பாதுகாப்புக் காரணங்களுக்காக சுதந்திரதின வைபவங்கள் மிகவும் கட்டுப்பாடுகளுடன் கோட்டே ஸ்ரீ ஜெயவர்த்தனபுர நாடாளுமன்றத்தின் முன் நடத்தப்பட்டன.

இம்முறை கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டு பொதுமக்களும் கலந்துகொள்ளும் வகையில் சுதந்திர சதுக்கத்தில் கொண்டாடப்படுகின்றது. முதன்முறையாக முப்படைகளின் அணிவகுப்புகளும் பாடசாலை மாணவர்களின் அணிவகுப்புகளும் நடைபெறவுள்ளன. (ஐ-3-9)

## கட்டாய ஆள்சேர்ப்பில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வில்லை. தன்னிச்சையாகவே நடக்கின்றனர்.

யுத்தநிறுத்தம் அறிவிக்கப்பட்ட பின்னர் விடுதலைப் புலிகள் எந்த வித யுத்தநிறுத்த மீறல்களையும் செய்யவில்லை. எமது உறுப்பினர்கள் படையினருடன் நட்புறவுடனேயே பழகுகின்றனர்.

சமாதானத்தையும் அமைதியையும் விரும்பாத போரினால் இலாபம் அடைந்துவரும் சிலர் முரண்பாடுகளைத் தோற்றுவிக்கின்றனர். இங்குள்ள படையினர் மேற்கொள்ளும் யுத்தநிறுத்த மீறல்கள் பற்றி சரியான கண்காணிப்பு இல்லாததால் ஊடகங்கள் இவற்றைக் கண்காணித்து அரசுக்கும் மக்களுக்கும் கூறவேண்டும்.

நாம் கட்டாய ஆள்சேர்ப்பில் ஈடுபடவில்லை. அவ்வாறான பிரசாரங்களில் எந்தவித உண்மையும் இல்லை. எமது இயக்கத்திற்கு மாசு கற்பிக்கும் நோக்குடன் சிலர் இவ்வாறான பிரசாரங்களை செய்து வருகிறார்கள்.

எமது இயக்கத்தின் பெயரைக் கூறி யாராவது கட்டாய ஆள்சேர்ப்பில் ஈடுபட்டால் அதுபற்றி உடனடியாக கொக்கட்டிச்சோலை, கரடியனாறு பகுதிகளில் உள்ள அரசியல் பிரிவு அலுவலகத்தில் முறைப்பாடு செய்யவேண்டும். போரால் பயனடைபவர்களும் சமாதானத்தையும் அமைதியையும் விரும்பாதவர்களும் இத்தகைய பிரசாரத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள். புதிய அரசு பதவிக்கு வந்தபின் சமாதானப்பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கும், சமாதானத்தை ஏற்படுத்துவதற்கும் எடுத்துவரும் முயற்சிகளை வரவேற்கின்றோம். ஆனால் சமாதானத்தையும் அமைதியையும் விரும்பாத போரினால் இலாபம் அடைந்துவரும் சிலர் முரண்பாடுகளைத் தோற்றுவிக்கின்றனர்.

நாம் பலமான நிலையில் - எமது சுயாதிபத்தியத்தை விட்டுக்கொடுக்காத நிலையில் - இருந்துகொண்டு தான் பேசமுடியும் பலவீனமான நிலையில் இருந்துகொண்டு பேசமுடியாது. எமது இயக்கத்தில் வந்துசேருவோரை இணைத்துக்கொள்கின்றோம்.

### படைகளை பலப்படுத்துகிறது அரசு

அரசு படைகளைப் பலப்படுத்தி வருகிறது. இராணுவத்திற்கும் கடற்படைக்கும் விசேட அதிரடிப்படைக்கும புதிதாக ஆள்சேர்ப்பு நடைபெறுகிறது. படைகளை அதிகரிக்கும் அதேவேளை, முகாம்களும் பலப்படுத்தப்பட்டு வருகின்றன. அரசின் நூறுநாள் திட்டத்தின் கீழ் படைச்சேர்ப்பு நடைபெறுகிறது. புதிய கடற்படை அதிவேக படகுகளும் 'மல்டிபரல்' குண்டுகளும புதிதாகக் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.

தமிழர்களுக்கு என்று ஒரு தேசியப்படை வேண்டும். அதைப்பலப்படுத்த வேண்டியது தமிழர்களின் தேசியக் கடமையாகும். எமது படையைப் பலப்படுத்த வேண்டும் என்ற தேசிய உணர்வுடன் ஒவ்வொரு கிராமத்திலும் வீட்டுக்கொரு போராளியைக கொடுக்க வேண்டும் என மக்கள் முன்வந்திருக்கிறார்கள். இதைக்கண்டு நாம் பெருமிதம் கொள்கின்றோம். இனஎழுச்சி ஒன்று ஏற்பட்டு வருகிறது - என்று தெரிவித்தார். (ஐ-3-9-21)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 04.02.2002இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.